பக்கங்கள்:19 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 29 ஞாயிற்றுக்கிழமை 13.03.2022 கதிர் 128

### இது இரகசியம் அல்ல!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையகமான யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதி அலுவலகத்தை 'வயோதிபர் மடம்' என்றுதான் பலரும் நகைச்சுவையாகக் கூறுவதுண்டு. காரணம் ஏன் என்பதை நான் விவரிக்க தேவையில்லை. அது ☞2

## பாதுகாப்பற்ற மின்சார வேலியில் சிக்கி 2 சிறுவர்கள் பரிதாபச் சாவு



### சம்மாந்துறையில் சோகம்

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறையில் பாதுகாப்பற்ற மின்சார வேலியில் சிக்குண்டு இரண்டு சிறுவர்கள் உயிரிழந்தனர்.

இருவரும் 13 வயதுடையவர்கள் என்று சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

றியாஸ் முஹம்மட் ஆசீக், முஹம்மட் இப்றாஹிம் ☞2

## வடக்கு மீனவர்களுக்கு நிவாரணப் பொதிகள்

### இன்று வழங்குகின்றார் இந்தியத் தூதுவர்



(ந.லோகதயாளன்)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லே, இன்று காலை 10 மணியளவில் யாழ்ப்பாணத்திலும், பிற்பகல் 2 மணியளவில் மன்னாரிலும் மாவட்ட செயலகங்களில் வைத்து ☞12

# ஜனாதிபதி – கூட்டமைப்பு சந்திப்பு திட்டமிட்டவாறு செவ்வாய் நடக்கும்



## ரெலோவின் விலகல் தொடர்பில் சம்பந்தன் கருத்துக் கூற மறுப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை திட்டமிட்டவாறு நடைபெறும். ரெலோவின் நிலைப்பாடு தொடர்பில் நான் பதிலளிக்க விரும்பவில்லை.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். ☞2

## ராஜபக்ஷக்களுடன் இணைய நாங்கள் முட்டாள்கள் அல்லர்



### விமல், கம்மன்பில கூட்டாகப் பதிலடி

எந்தத் தேர்தல் வந்தாலும் ராஜபக்ஷக்களின் குடும்பக் கட்சியுடன் நாம் இணையவேமாட்டோம். அவ்வளவுக்கு நாம் முட்டாள்களும் அல்லர்.

– இவ்வாறு முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாகப் பதிலடி வழங்கினர்.

'முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் தேர்தலொன்று ☞2

## அடுத்த வாரம் டில்லி பறக்கின்றார் பஸில்



நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அடுத்த வாரம் இந்தியா பயணிக்கவுள்ளார் என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியாவிடமிருந்து பெறப்படவுள்ள ஒரு மில்லியன் டொலர் ஒப்பந்தம் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் இதன்போது முன்னெடுக்கப்படவுள்ளன என்று நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ☞2

## பதுளையில் நீரில் மூழ்கி பாடசாலை மாணவன் பலி

பதுளை நகரத்தை அண்மித்த மெதிரிய நீர்நிலையில் நீராடச் சென்ற மாணவர்களுள் ஒருவர் நீரில் மூழ்கிப் பலியாகியுள்ளார்.

பதுளையில் உள்ள பிரபல பாடசாலையொன்றில் கல்வி கற்கும் நிலக்ஷன் (வயது 16 ) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பகல் நண்பர்கள் சகிதம் நீராடச் சென்ற வேளையிலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக பதுளை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. ☞2

## சிறப்புற நடந்த கச்சதீவு திருவிழா

(கச்சதீவிலிருந்து இ.கலையமுதன்)

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழாத் திருப்பலி நிகழ்வு நேற்றுக் காலை யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் கொடியேற்றத்தையடுத்து சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் திருச் சொரூப பவனி ஆகியன இடம்பெற்றன.

இந்தத் திருவிழாவுக்கு இலங்கை ☞2



## பஸிலுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை வரும்?

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவது குறித்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பரிசீலித்துள்ளது.

பொருளாதார நிலை, ☞2

## பஸ் கட்டண உயர்வு குறித்து ஓரிரு நாள்களுக்குள் முடிவு

### போக்குவரத்து அமைச்சர் அறிவிப்பு



பஸ் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இன்னும் ஓரிரு நாள்களுக்குள் தீர்மானம் எடுக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம நேற்று தெரிவித்தார்.

நாட்டில் எரிபொருள் விலை ☞2

## பிரதிகளைப் பதிவு செய்யுங்கள்!

பசுமை ஊடக இல்ல வெளியீடான நமது பத்திரிகை தாவரங்களைப் பேணும் பசுமை நடவடிக்கையில் கவனம்மிக்கது என்ற காரணத்தினாலும், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள காகிதத் தட்டுப்பாட்டினாலும் பத்திரிகைத்தாள்கள் வீணாவதைத் தவிர்க்க விரும்புகிறோம். ஆகவே, எமது அச்சுப் பிரதிகளைப் பெற விரும்புவோர் நமது நிறுவனத்துடன் அல்லது எங்கள் முகவர்களுடன் தொடர்பு கொண்டு முற்கூட்டியே பதிவு செய்து பெறுவதன் மூலம் விரயத்தை தவிர்த்து ஒத்துழைக்குமாறு வேண்டுகிறோம்.

தொடர்பு:-0773078799

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எல்லோருக்கும் தெரியும்.

கட்சியில் இளைஞர்களுக்கு முக்கிய இடம் கொடுக்க வேண்டும் என்று மூத்த தலைவர் சம்பந்தனிலிருந்து கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் வரை அவ்வப்போது மேடைகளில் முழங்குவது உண்டு. ஆனால் அது நடப்பதே இல்லை. இருக்கும் 'வயோதிப நந்திகள்' விலகிக் கொடுத்தால்தானே இளைஞர்களுக்கு இடம் கிடைக்கும்...? அதற்கு மாறாக, வயோதிப நந்திகளை இடம் விலகிக் கொடுக்காமல் அவற்றை நிலை நிறுத்தும் நடவடிக்கைகள்தான் சத்தம் சந்தடியின்றி முன்னெடுக்கப்படுகின்றன.

கட்சி நிர்வாகப் பதவிகளில் இருந்து நாடாளுமன்ற வேட்பாளர் நியமனம் வரை ஒரே அணிதான் ஆக்கிரமித்து கையாண்டு கொண்டிருக்கின்றது. அதில் பெரும்பாலும் மாற்றம் வராது; வருவதில்லை. அதுதான் கட்சி நாளொரு வண்ணமும் பொழுதொரு சந்தர்ப்பமுமாகத் தேய்ந்து கொண்டிருப்பதற்குக் காரணம். அது பற்றி விவரிப்பதானால் ஒரு நீண்ட பட்டோலை வாசிக்கலாம். அதனால் விட்டுவிடுகிறேன்.

கட்சியின் தலைமைப் பதவியில் பெரும்பாலும் ஒருவர் கூடியது இரு தடைவைகள்தான் பதவி வகிப்பர். இது ஆரம்ப காலம் முதல் எழுத்தில் இல்லாத வழக்காறு. கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வநாயகம் கூட இதற்கு விதிவிலக்கல்லர்.

ஆனால் அவரை விடப் பெருந்தலைவராக தம்மை நினைத்துள்ள மாவை சேனாதிராஜா கட்சித் தலைவர் பதவி தமக்கு விதிக்கப்பட்ட முதுசொம் – பரம்பரைச் சொத்து – என்று எண்ணிவிட்டார் போலும்.

இரண்டு பதவிக்காலம் என்றால் கூடியது தலா இரண்டு ஆண்டுகளைக் கொண்ட நான்கு வருடங்களாக இருக்க முடியும். அதுதான் வழமை.

ஆனால் மாவை சேனாதிராஜா கட்சித் தலைமைப் பதவியை ஏற்று இப்போது எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்தக் கால கட்டத்தில் ஒரே ஒரு தேசிய மாநாட்டைத்தான் கட்சித் தலைவராக அவர் கூட்டியிருக்கின்றார். எட்டு வருடங்கள் கடந்த பின்னரும் அவர்தான் தலைமையில் தொடர்கின்றார்.

தேசிய மாநாட்டைக் கூட்டும்படி கட்சிக்குள் நெருக்கடி தீவிரமாகி வருகின்றது. உரிய காலத்தில் தேசிய மாநாட்டைக் கூட்டவில்லை என்று யாராவது நீதிமன்றுக்குப் போனால் கட்சியின் அங்கீகாரமே கேள்விக்குறியாகும் ஆபத்தும் உண்டு.

கட்சியின் மத்திய குழுவும் பல தடவைகள் கூடி, கட்சிக் கிளைகளைப் புனரமைத்து தேசிய மாநாட்டை நடத்தும்படி தலைவருக்கு பலவாறாக அழுத்தம் கொடுத்தபடி இருக்கின்றது. அதனால் தேசிய மாநாட்டைக் கூட்ட வேண்டிய கட்டாயம் தலைவருக்கு. அதேசமயம் மாநாட்டைக் கூட்டி கட்சித் தலைவர் பதவியை வேறொருவருக்கு விட்டுக் கொடுக்கவும் விருப்பமில்லை. தேசிய மாநாட்டை நடத்தினால் தலைவர் பதவி பறிபோய் விடும் என்ற பயம் உண்டு.

அதனால், கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் ஐக்கியம் கருதி தன்னையே தலைவராகத் தொடர ஒற்றைக் காலில் நின்று, விடாப்பிடியாக வலியுறுத்துகின்றார்கள் என்று ஒரு கதையை அவிட்டு விட்டு, தலைமைப் பதவியைத் தக்க வைக்கலாம் என்று ஒரு கடைசி நப்பாசைத் திட்டம் அவரிடம் உண்டு எனத் தெரிகின்றது. அதற்கான விடயங்களே இப்போது கட்டவிழ்கின்றன.

மாவையருக்கும் பதவி ஆசைக்கும் உள்ள நெருக்கம், நெருப்பும் சூடும் போல பிரிக்க முடியாதது என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரிந்த விடயம்.

கட்சிக்குள் அழுத்தம் அதிகரித்ததால் தேசிய மாநாட்டைக் கூட்டும் கட்டாயம். அதற்காக மூலக் கிளைகள், தொகுதிக் கிளைகள், மாவட்டக் கிளைகளைப் புனரமைக்க வேண்டிய நிர்ப்பந்தமும் கூட.

கிளை புனரமைப்புகளுக்காக கிளை நிர்வாகிகளை சந்திக்கும் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா அதற்கான கூட்டங்களில் பேச்சு மூலமும், பின்னர் எழுத்து மூலமும் கூட ஒரு விடயத்தை விடாது வலியுறுத்தி வருகின்றார். 'அடுத்த இலைக்கு பாயாசம் ஊற்று!' என்ற மாதிரியான கட்டளைதான் அது.

"நிர்வாகிகள் தெரிவில் கட்சியின் மூத்தோருக்கு முன்னுரிமை" என்பதுதான் அந்த வழிகாட்டல், கட்டளை எல்லாம். சம்பந்தன், சுமந்திரனின் 'இளையோருக்கு முக்கிய இடம்' என்ற திட்டத்துக்கு முழுமையாக மாறான ஏற்பாடு.

தொகுதிக் கிளைகள், மாவட்டக் கிளைகளில் மூத்தோருக்கு இடமளியுங்கள் என்று விழுந்து விழுந்து வலியுறுத்தினால் அதன் அர்த்தம் என்ன? அடுத்த இலைக்கு பாயாசம் என்றால் என் இலைக்கும் சேர்த்து என்ற மாதிரித்தான் இதுவும். மூல, தொகுதி, மாவட்டக் கிளைகளை அடுத்து தேசிய மாநாட்டில் மூத்தவரான என்னைத் தொடர்ந்து தமிழரசுத் தலைவராக வைத்திருங்கள் என்பது தானே அர்த்தம்?

அதுதான் தெரிவு என்றால் தமிழரசு ஸ்தாபகர் தந்தை செல்வா சொன்ன விடயம் தமிழ் மக்களுக்கு என்பதற்கு முன்னர் அது தமிழரசு கட்சிக்குத்தான் பொருந்துவதாக இருக்கும்.

அது – 'இனி தமிழரசைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்பதே.

போனவாரம் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட கிளையின் கூட்டம் நடைபெற்றது. அங்கும் இந்த மூத்தவருக்கு முன்னுரிமை வழங்கும் வலியுறுத்தல் பிரதானமாக இருந்தது.

ஒரு கொசுறு தகவல் – அந்த யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தமிழரசுக்கு இந்த முறை இரண்டு எம்.பிக்கள் தெரிவு செய்யப்பட்டனர். இருவருமே கட்சியின் தொகுதிக் கிளைகளின் தலைவர்களும் கூட. ஆனால் மாவட்டக் கிளை மறுசீரமைப்புக் கூட்டம் குறித்து அந்த இரு எம்.பிகளுக்கும் தகவலே தரப்படவில்லை. அவர்கள் இல்லாமல்தான் கூட்டம் நடைபெற்றது. என்னமோ, ஏதோ நடக்கிறது என்றுதான் எனக்கு தோன்றுகின்றது.

– மின்னல் –

## பஸிலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பொது மக்கள் மத்தியில் அது ஏற்படுத்தும் தாக்கம் மற்றும் பொருளாதார நெருக்கடி குறித்து நாடாளுமன்றத்தில் நிதி அமைச்சர் விளக்கமளிக்கத் தவறியமையை அடுத்து அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவது குறித்து அக் கட்சி ஆராய்ந்துள்ளது.

இவ்விடயம் குறித்து கட்சி தற்போது உள்ளகக் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

## சிறப்புற நடந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மற்றும் இந்தியாவில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களே வருகை தந்தமையுடன் அவர்கள் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கடற்படைத் தளபதி பிரியந்த பெரேரா, ஓய்வுபெற்ற கடற்படைத்தளபதி அட்மிரல் விஜேகுணரட்ண, யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன், வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜகத் பளிகக்கார, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் கே.விமலநாதன், நெடுந்தீவு பிரதேச செயலர் சத்தியசோதி மற்றும் மதகுருமார்கள், கடற்படை இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பக்தர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

இந்தத் திருவிழாவில் பக்தர்களின் நலன் கருதி சுகாதார வசதிகள், போக்குவரத்து ஒழுங்குகள், உணவு வசதிகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டன.

## அடுத்த வாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஆட்டிகல தெரிவித்தார்.

இயலுமான அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்கு உதவுவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் உறுதியளித்துள்ளார் என்று கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தின் டுவிட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கு முன்னர் இரு சந்தர்ப்பங்களில், நிதி அமைச்சர் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த போதிலும் பல்வேறு காரணங்களால் இரத்துச் செய்யப்பட்டது.

இதனிடையே, கடன் மறுசீரமைப்பு மற்றும் டொலர் பற்றாக்குறையை முகாமைத்துவப்படுத்துவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை பேச்சுகளை ஆரம்பிக்கவுள்ளது என ரொய்ட்டர் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இந்தப் பேச்சுகள் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளன எனவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பஸ் கட்டண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், பஸ் கட்டணத்தையும் அதிகரிக்க அனுமதி வழங்குமாறு தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்படி ஆரம்ப பஸ் கட்டணத்தை 30 ரூபாவாக நிர்ணயிக்குமாறும், ஏனைய கட்டணங்களையும் உரிய வகையில் அதிகரிக்குமாறு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு இல்லாவிட்டால் பஸ்களுக்கு பழைய விலையில் 'டீசல்' பெற்றுக்கொடுக்கப்படுமானால் விலை உயர்வு மேற்கொள்ளப்படாது என பஸ் உரிமையாளர் சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே பஸ் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இன்னும் ஓரிரு நாட்களுக்குள் முடிவெடுக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் அறிவித்துள்ளார்.

## ஜனாதிபதி - கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஜனாதிபதிக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு குறித்து பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவிப்புகள் வெளியாகி இருந்தபோதும், அவை நடைபெற்றிருக்கவில்லை.

இந்நிலையில், ஜனாதிபதி செயலகத்தால் இந்தச் சந்திப்பு குறித்த அறிவித்தல் கடந்த சில நாள்களுக்கு முன்னர் கூட்டமைப்பின் தலைமைக்கு வழங்கப்பட்டது.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இப்போது விடுத்துள்ள அழைப்பை ஏற்பது சர்வதேசப் பொறியிலிருந்து அவரை மீட்கும் நடவடிக்கையாகி விடும் எனத் தெரிவித்த ரெலோ, அதன் காரணமாக அந்தச் சந்திப்பில்தான் கலந்துகொள்வதில்லை என முடிவு செய்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ தனது முடிவைக் கூட்டமைப்பின் தலைமைக்கு எழுத்திலும் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., மார்ச் 10 ஆம் திகதியிட்டு அனுப்பிவைத்தார் எனக் கூறப்படும் கடிதம் ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

இந்த விடயம் பற்றி கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் நேற்று வினவியபோது:–

ரெலோவின் நிலைப்பாடு தொடர்பில் நான் பதிலளிக்க விரும்பவில்லை. எனினும், ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திட்டமிட்டவாறு நடைபெறும்.

ஜனாதிபதி காரியாலயத்தில் பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியுடன் அவர் தரப்பில் யார் கலந்துகொள்வார்கள் என்று எமக்குத் தெரியாது.

கூட்டமைப்பின் சார்பில் நானும், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் மற்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வோம்.

வடக்கு, கிழக்கின் நிலைமை மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகள், புதிய அரசமைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களை இந்தச் சந்திப்பின்போது பேசவுள்ளோம் – என்றார்.

## பாதுகாப்பற்ற மின்சார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஆகிய சிறுவர்களே பரிதாபகரமாக மரணித்தனர்.

குறித்த சிறுவர்கள் வீட்டுக்கு அருகில் உள்ள காணியொன்றில், விறகு சேகரிப்பதற்கு நேற்று மதியம் சென்ற நிலையிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

தென்னந்தோப்பில் பொருத்தப்பட்டிருந்த யானை பாதுகாப்பு மின்சார வேலியில் சிக்குண்டே இவர்கள் சாவடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சம்மாந்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ராஜபக்ஷக்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வரும்போது எங்களைத் தேடி வருவார்கள்' என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களைப் பிரதமர் நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

பிரதமரின் இந்தக் கருத்து தொடர்பில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ஸ எம்.பி., புதிய ஹெல உறுமயவின் தலைவரான உதய கம்மன்பில எம்.பி. ஆகியோர் ஊடகங்களிடம் நேற்று பதிலளிக்கும்போது:–

எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கின்றோம். எந்தத் தேர்தல் வந்தாலும் ராஜபக்ஷக்களின் குடும்பக் கட்சியுடன் நாம் இணையவே மாட்டோம். அவ்வளவுக்கு நாம் முட்டாள்களும் அல்லர்.

தேர்தல் அறிவிப்பு வந்ததும் எமது அதிரடி ஆட்டங்களை ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியினர் பார்ப்பார்கள்.

நாம் பதவிகளுக்காக அலைபவர்கள் அல்லர். பதவி ஆசை எமக்கு இருந்திருந்தால் அரசுக்குள் இருந்துகொண்டே அரசின் மோசமான செயல்களை விமர்சித்திருக்கமாட்டோம்.

நாட்டின் நலன் கருதியும், இந்த ஆட்சிக்கு ஆணை வழங்கிய மக்களின் நம்பிக்கைக்கும் மதிப்பளித்தே உண்மைகளை வெளியில் உரக்கச் சொன்னோம்; அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தோம். அதனால் எமது அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி பிடுங்கி எடுத்தார் – என்றனர்.

## பதுளையில் நீரிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

சிறுநீரகம் தேவை
31 வயது இளைஞர் ஒருவருக்கு
ஓ பொசிட்டிவ் (O+) ரக சிறுநீரகம்
ஒன்று தேவை.
வழங்க முன்வருபவர்கள்
076 237 6603
என்னும் தொலைபேசி இலக்கங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.

# சம்பூரில் அனல் மின் உற்பத்தி நிலையத்துக்காக ஒதுக்கப்பட்ட காணியில் சூரிய ஒளி மின்னுற்பத்தி!

சம்பூரில் சூரிய ஒளி மின்னுற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கான கூட்டு முயற்சி பங்குதாரர்கள் உடன்படிக்கையில் இலங்கை இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை மின்சார சபைக்கும், இந்திய தேசிய அனல் மின் கூட்டுத்தாபனத்துக்கும் இடையில் வெள்ளிக்கிழமை மாலை இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

திருகோணமலை, சம்பூரில் உள்ள சூரிய சக்தி நிலையம் தொடர்பான ஆரம்ப விவாதங்கள், இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய எரிசக்தி நிறுவனமான என்.ரி.பி.சி. லிமிடெட் நிறுவனத்துக்கும் இடையில் கடந்த பெப்ரவரி மாதம் ஆரம்பமானது.

கடந்த அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்ட நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்துக்காக சில ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவனத்துக்கு குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தில் அரசாங்கத்தின் தற்போதைய 50 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க மின் நிலைய முயற்சியின் கீழ் சோலார் பார்க் திட்டம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இல.266, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 197 1667, 077 316 4796

## மணமகள் விவரம்

பிறந்த திகதி - 03.05.1987 மதம் - இந்து
ஜாதி - -குயவர் நட்சத்திரம் - புனர்பூசம் 2 இல்
கி.பா - 21 செவ் - 11 இல்
தகைமை - Civil Eng (Tech) தொழில் - T.O அரச சேவை
எதிர்பார்ப்பு-அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 25.01.1994 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - திருவாதிரை 2 ல்
கி.பா - 74 செவ்/சூரி 1இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor Eng Australia, Canada மணமகன்

பிறந்த திகதி - 19.12.1995 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - விசாகம் 1இல்
கி.பா - 17 செவ்/சூரி 11 இல்
தகைமை - Software Eng தொழில் - Company
எதிர்பார்ப்பு - Canada மணமகன்

பிறந்த திகதி - 26.12.1994 மதம் - இந்து
ஜாதி -K பகுதி நட்சத்திரம் - அத்தம் 2 இல்
கி.பா - 38 செவ் 11 இல்
தகைமை - H.N.D.A தொழில் - Postmaster
எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகன்

பிறந்த திகதி - 14.05.1994 மதம் - இந்து
ஜாதி - K பகுதி நட்சத்திரம் - மிருகசீரிடம்
கி.பா - 42 செவ் 12 இல்
தகைமை - B.A Hons தொழில் - அரசசேவை முயற்சி
எதிர்பார்ப்பு - அரசசேவை, பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி - 12.01.1992 மதம் - இந்து
ஜாதி - K பகுதி நட்சத்திரம் - உத்தரட்டாதி
கி.பா - 17 செவ்/சூரி 2 இல்
தகைமை - Food Eng தொழில் - N.G.O COMPANY
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 25.01.1994 மதம் - இந்து
ஜாதி V பெண் நட்சத்திரம் - திருவாதிரை 2
கி.பா - 74 செவ்/சூரி. 1 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor Canada,Australia,U.S.A மணமகன்

பிறந்த திகதி - 8.12.1990 மதம் - இந்து
ஜாதி V பெண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 24 செவ் 8 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor, Eng மணமகன்

## மணமகன் விவரம்

பிறந்த திகதி - 2.10.1979 மதம் - இந்து
ஜாதி - -V ஆண் நட்சத்திரம் - அவிட்டம் 2 இல்
கி.பா - 66 செவ் - 6 இல்
தகைமை-M.C.A தொழில்-Company Colombo
எதிர்பார்ப்பு -பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி - 01.10.1988 மதம் - இந்து
ஜாதி -குயவர் நட்சத்திரம் - மிருகசீரிடம்
கி.பா - 62 செவ் - 2 இல்
தகைமை - H.N.D.E தொழில் - Company colombo
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி - 16.06.1989 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - விசாகம் 3 இல்
கி.பா - 28 செவ் - 9 இல்
தகைமை - CIMA தொழில் - Australia PR
எதிர்பார்ப்பு - பட்டதாரி இலங்கை, Australia மணமகள்

பிறந்த திகதி - 11.03.1995 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - திருவாதிரை
கி.பா - 71 செவ் 1 இல்
தகைமை - BSc.Eng தொழில் - Eng அரசசேவை Colombo
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி - 30.04.1992 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - உத்தராடம்
கி.பா - 33 செவ் 2 இல்
தகைமை - E.Eng தொழில் - விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள்

பிறந்த திகதி - 04.09.1992 மதம் - இந்து ஜாதி - V ஆண்
நட்சத்திரம் - கேட்டை 4 கி.பா - 15 செவ் 2 இல்
தகைமை - G.C.E A/L தொழில் - Company Manager
எதிர்பார்ப்பு - G.C.E A/L சீதனம் பெரிதாக
எதிர்பார்க்கப்படவில்லை காரைநகர் முன்னுரிமை

பிறந்த திகதி - 06.07.1993 மதம் - இந்து ஜாதி -V ஆண்
நட்சத்திரம் - சுவாதி 2 இல் கி.பா - 36 செவ் 5 இல்
தகைமை - G.C.E A/L தொழில் - கடை உரிமையாளர்
எதிர்பார்ப்பு - G.C.E A/L சீதனம் பெரிதாக
எதிர்பார்க்கப்படவில்லை காரைநகர் முன்னுரிமை

பிறந்த திகதி -01.06.1984 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - திருவாதிரை
கி.பா - 14 செவ் 9 இல்
தகைமை - G.C.E A/L தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - UK Or ஐரோப்பா மணமகள்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர்
தொலைபேசி
021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ENGLISH CLASSES
யாழ் நகரில் தனி வகுப்புகள் A/L எடுத்தவர்கள் பெறுபேறுகள் வரமுன் தரமாக பேசும் எழுதும் ஆற்றலை வழங்கும் துரித வகுப்புகள்
G.G.E. O/L - English Literature
Grade 10 & 11 தனி வகுப்புகள்
Language தரமும் திருத்தப்படும்.



K.Ganesh B.A . 077 7668725

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை




யாழ்ப்பாணம் - நல்லூர்- வட்டுக்கோட்டை - சங்கானை - சுன்னாகம் - ஆவரங்கால்- நெல்லியடி - கைதடி - சங்கத்தானை - பளை - கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு - கனகராயன்குளம் - மல்லாவி - மன்னார் - வவுனியா - திருகோணமலை- மூதூர் - கொழும்பு


POST YOUR AD yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட்டஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

BRRENS
Reborn
Signature
Fashion Planet
எங்களிடம் பெண்களுக்கான அனைத்து ஆடைகளும். பிரத்யேகமான திருமணம். பூப்புனித நீராட்டு விழா மற்றும் சுப நிகழ்வுகளுக்கு சாறி பிளவுஸ் ஆரிவேக்ஸ் சிறந்த முறையில். குறித்த தவணையில் செய்து தரப்படும்.
பிறென்ஸ்
பஷன் பிளானட்
சிவன் கோவில் வடக்கு வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
Fb.Brrens Fashion Planet
Email.brensfashionplanet@gmail.com
ஆண்கள், பெண்களுக்கான அனைத்து ஆடைகள்
075 527 9110
077 332 1937
021 2221 2777




Northern PC Park
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## ரெலோவின் கண்டுபிடிப்பு

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இப்போது விடுத்துள்ள அழைப்பை ஏற்பது சர்வதேச பொறியில் இருந்து அவரை மீட்கும் நடவடிக்கையாகிவிடும் என்று 'மகா கண்டுபிடிப்பு' ஒன்றைக் கண்டறிந்து, மகா புத்திசாலியாக நடப்பதாக நினைத்துக்கொண்டு, அந்தச் சந்திப்பைப் பகிஷ்கரிக்கும் அறிவிப்பை விடுத்திருக்கின்றது ரெலோ.**

**அந்த அழைப்பை தமிழர் தரப்பு புறக்கணிப்பதுதான் உண்மையில் ராஜபக்ஷகளின் பௌத்த, சிங்கள பெரும்பான்மை தேசியவாதத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதாக போய்விடும். அதுதான் உண்மையில் யதார்த்த நிலையாகும்.**

**தமிழர் தேசத்திற்குத் தீர்வே தராமல் இழுத்தடிப்பதும், தமிழர் தாயகப் பகுதிகளைத் தனது பேரினவாத ஆட்சியின் மூலம் – அதிகாரத்தின் வாயிலாக – பௌத்த சிங்கள மயப்படுத்தி, தமிழர் தேசம் என்ற ஒன்றே இல்லாமல் நிர்மூலமாக்குவதே ராஜபக்ஷ அரசின் திட்டம் என்பது தெளிவானது. வெளிப்படையானது. அதற்கு இன்னும் கால அவகாசம் வேண்டிப் பார்த்து, காத்து இருக்கிறது அது.**

**தமிழருக்கு நீதி செய்யப்படவேண்டும் என்பது தொடர்பில் ராஜபக்ஷக்களுக்கு சர்வதேச அழுத்தம் உண்டு. அதில் சந்தேகமில்லை. ஆனால் அந்த அழுத்தம், இலங்கையின் கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளி, அழுத்தி, ஒரே கணத்தில் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தில் தமிழருக்கு தீர்வு ஒன்றை வழங்கு என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாக அது அமையவில்லை. அதுதான் யதார்த்த நிலைமை.**

**தமிழர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற தங்களின் வலுவான இராணுவக் கட்டமைப்பு நிலையோடு இருந்த காலத்தில் கூட, தமிழர் தரப்போடு பேசி தீர்வை வழங்குங்கள் என்றுதான் சர்வதேசம் சிங்களத்தை வழிப்படுத்தி வந்தது. இப்போதும் அதைத்தான் சர்வதேசம் சொல்லுகின்றது; சிங்களத்துக்கு அழுத்தம் கொடுக்கிறது.**

**தமிழரோடு பேசித் தீர்வுக்கு வழி வகைகள் காணுங்கள் என்று சிங்களத்தின் மீது இந்தியாவும் பிற சர்வதேச நாடுகளும் கொடுக்கும் அழுத்தம் காரணமாகதான் இப்போது பேச்சு நாடகத்தை ஆரம் பித்திருக்கிறார் கோட்டாபய ராஜபக்ஷ என்பதும் வெள்ளிடைமலை. அதிலும் சந்தேகம் இல்லை.**

**அந்தப் பேச்சு மேசைத் தளத்தை – மேடையை – தமிழர் தரப்பு தந்திரோபாயமாக, சமயோசிதமாக, சாணக்கியமாக கையாள்வதில்தான் விவகாரமே உள்ளது.**

**ரெலோ கூறும் காரணங்களை ஒரு பொருட்டாக முன்வைத்து, ரெலோவைப் போல பேச்சு அழைப்பைப் புறக்கணித்து, அதனைப் பகிஷ்கரித்தால், கோட்டாபய ராஜபக்ஷ நிர்வாகம் எதைத் தமிழர் தரப்பில் விரும்புகின்றதோ, அதை முட்டாள்தனமாக தமிழர்கள் தாங்களே நிறைவேற்றி கொடுத்தார்கள் என்றாகிவிடும்.**

**'பார்த்தீர்களா? நாங்கள் பேச்சு மேசையில் பேசித் தீர்க்க முயன்றோம். தமிழர் தரப்பு அதனைப் புறக்கணித்து விட்டது. நாங்கள் என்ன செய்ய முடியும்?' என்று தெரிவித்து கோட்டாபய நிர்வாகம் சர்வதேச அழுத்தத்தில் இருந்து தப்பிக் கொள்ளும். தமிழர் தேசத்தை ஆக்கிரமித்துக் கபளிகரம் பண்ண அதற்கு நேர கால வசதிகளும் கிட்டும்.**

**ஜனநாயக வழிமுறைமிலான போராட்டங்களில் பேச்சு மேசையை – பேச்சு மேடையை – சரிவர பயன்படுத்துவதில் தான் வெற்றி தங்கியுள்ளது.**

**உக்ரைனை ஆக்ரோஷமாகத் தூண்டி, ஏற்றிவிட்ட மேற்குலகம், உக்ரைன் இப்போது அடி வாங்கும்போது வெளியில் இருந்து கத்துகின்றது. அவ்வளவுதான் அது செய்யும்.**

**இலங்கை விடயத்திலும் அதுதான் பொருந்தும்.**

**பேச்சு மேசைக்கு இரண்டு தரப்புகளையும் கொண்டுவந்து, இணக்கமான ஒரு தீர்வைப் பேசிக் காணுங்கள் என்றுதான் சர்வதேசம் அழுத்தம் கொடுக்குமே தவிர, தீர்வு எதையும் கொழும்பிடமிருந்து பிடுங்கித் தரும் கைங்கரியத்தை அது செய்யப்போவதில்லை.**

**'அழுதும் அவள்தான் பிள்ளை பெற்றாக வேண்டும்' என்பது போல எங்கள் பிரச்சினைக்கான தீர்வை நாங்களேதான் பெற்றாக வேண்டும். அதற்கான தரப்பான இலங்கை ஜனாதிபதியுடன் தமிழர்கள் பேசித்தானாக வேண்டும். அதைக் கண்மூடித்தனமாக பகிஷ்கரிப்பது முட்டாள்தனமாகும்.**

# யாழ்.மாநகரத்தின் மின்சாரத் துண்டிப்பை ஆளுநர் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்!

### யாழ்.மாநகர பிரதி முதல்வர் ஈசன் கோரிக்கை



யாழ் நகரப்பகுதிகளில் மின்சார சிக்கனம் என்ற போர்வையில் மின் துண்டிப்பை மேற்கொள்வதை வடமாகாண ஆளுநர் மீள்பரிசீலனை செய்யவேண்டும் என யாழ். மாநகர பிரதி முதல்வர் துரைராசா ஈசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.மாநகர சபையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் உள்ளூராட்சி மன்றங்களில் மின்சார சிக்கனத்தைப் பேணுமாறு சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது. இதனை வலியுறுத்தி வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா உள்ளூராட்சி மன்றங்களுக்கு வீதி மின்விளக்குகளின் மின்சார சிக்கனத்தைப் பேணுமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்.நகரப் பகுதிகளில் ஐந்துக்கு மேற்பட்ட எரிபொருள் நிலையங்கள் மற்றும் மொத்த வியாபார வர்த்தக நிலையங்கள் காணப்படுகின்ற நிலையில் இரவு நேரங்களில் மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

ஏனெனில் எரிபொருளுக்காக மக்கள் இரவு நேரங்களில் எரிபொருள் நிலையங்களில் காத்திருக்கின்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான நிலையில் வீதி மின் விளக்குகளை அணைக்கும்போது வீதி விபத்துக்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றமையுடன், மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அசௌகரியத்தையும் ஏற்படுத்துகிறது. நாட்டில் இராணுவ அதிகாரிகளின் ஆலோசனைப்படி நிர்வாகங்களை நடத்துவதால் தேவையற்ற முடிவுகளைத் தேவையற்ற நேரங்களில் மேற்கொள்கிறார்கள்.

அமைச்சர்கள் மற்றும் அரச பிரதிநிதிகள் தமது சுகபோக வாழ்க்கையை அனுபவித்து வருகின்ற நிலையில் சாதாரண மக்களை நெருக்குதலுக்கு உள்ளாக்கிறார்கள்.

எரிபொருள் விலையேற்றம், சமையல் எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு என மக்கள் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்ற நிலையில் மின்சாரத்தையும் துண்டித்து அரசு வேடிக்கை பார்க்கிறது.

யாழ்.நகரப் பகுதிகளில் பல மின் விளக்குகள் துண்டிக்கப்பட்டனவாக அறியக் கிடைக்கும் நிலையில் அதனை மீளப் பொருத்துவதற்கு வடமாகாண ஆளுநர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்க வேண்டும்.

ஆகவே, இந்த விடயம் தொடர்பில் வடமாகாண ஆளுநருக்கு எழுத்து மூலமான கடிதம் ஒன்றை அனுப்புவதற்குத் தயாராக இருக்கிறேன். – இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# கம்மன்பில மன்றில் பேச பெரமுனவினர் எதிர்ப்பு!



நாடாளுமன்றத்தின் பேச்சாளர் பட்டியலில் இருந்து தமது பெயர் தவிர்க்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில சபாநாயகரிடம் முறையிட்டுள்ளார்.

எரிசக்தி நெருக்கடி தொடர்பான விவாதத்தின்போது நாடாளுமன்றத்தில் பதில் உரையை ஆற்றவிருந்தார் என கம்மன்பில ருவீட் செய்துள்ளார்.

பதவியில் இருந்து நீக்கப்பட்டதால், பேசுவதற்கு நேர அவகாசம் கோரி தாம், மார்ச் 7ஆம் திகதி எழுத்துபூர்வமாக கோரிக்கை விடுத்தார் என முன்னாள் அமைச்சர் கூறியுள்ளார்.

எனினும், மார்ச் 8 ஆம் திகதி அரச கட்சியின் பிரதம அமைப்பாளர் அலுவலகம் தன்னைப் பேச அனுமதிக்க முடியாது என்று தெரிவித்தது என அவர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்தே சபாநாயகரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என கம்மன்பில ருவீட் செய்துள்ளார்.

ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 331 வாக்குகளைப் பெற்று பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட தமக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் பேசுவதற்கான உரிமையை மறுப்பது என்பது தனது வாக்காளர்களின் இதயங்களையும் மனதையும் வெளிப்படுத்த மறுப்பதாகும் என்று அவர் கூறியுள்ளார்.

# மாட்டு வண்டியில் பயணிக்கின்ற நாகரிகமற்ற வாழ்வு வாழ்கிறோம்

### இப்படிச் சொல்கிறார் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஜெகதீசன்

(விஜயரத்தினம் சரவணன்)

இந்த நாட்டு மக்களும் ஏனைய உலக நாடுளில் உள்ள மக்களைப்போன்று வாழ வேண்டும். ஆனால், தற்போது இந்தநாட்டில் மாட்டுவண்டிலில் செல்லவேண்டிய துர்ப்பாக்கியமான வாழ்க்கையையே மக்கள் வாழ்கின்றனர் என கரைதுறைப்பற்று பிரதேசசபையின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் இரத்தினம் ஜெகதீசன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்கள் எரிபொருள் பற்றாக்குறையைக் கண்டித்து மாட்டுவண்டிலில் மாதாந்த சபை அமர்விற்குச் சென்றிருந்தனர். இந்தக் கண்டன நடவடிக்கையில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

எமது முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயம் மற்றும், மீன்பிடி என்பவற்றை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்களே அதிகம் வாழ்கின்றனர்.

குறிப்பாக விவசாயத்தைப் பொறுத்தவரையில், எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்பதாக தண்ணிமுறிப்பு பகுதியிலே சுமார் 2 ஆயிரத்து 700 ஏக்கரில் விவசாயிகள் நெற்பயிர் செய்கை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இருப்பினும் விவசாயிகளுக்குரிய எரிபொருள் இன்மையால் அவர்கள் பெரிதும் அல்லல்படுகின்றனர்.

இந்நிலையில், இவ்வாறு மாட்டுவண்டியில் சபைக்கு வருகைதந்து இந்த மக்களின் நிலையை அரசிற்கு வெளிப்படுத்தியிருக்கின்றோம். எமது மக்களும் உலகநாடுகளில் உள்ள மக்களைப்போன்று நாகரிகமாக வாழவேண்டும். ஆனால் தற்போது இந்த நாட்டிலே, நாம் மாட்டுவண்டியில் பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். – என்றார்.

யாழ். **கலாலயா** பயிற்சியகம்
இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**A/L** பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!
வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!
மற்றும் ஆர்வம் உள்ள மகளிரே!

**உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- *கேக் ஐசிங்* – றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- *உணவு தயாரித்தல்* – உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- FACIALS *(முக அழகுக்கலை)* Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- *கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்* 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS *(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகளும் பயிற்று விக்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவியருக்கு கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்.

**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**16.03.2022 புதன் காலை 10.00 மணி**
**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**20.03.2022 ஞாயிறு காலை 10.00மணி**

மேலதிக விபரங்களை
காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்

-இயக்குநர்-

Guru

## தமிழகத்திலிருந்து இலங்கைக்கான அதிசொகுசு உல்லாச கப்பல் சேவை!

தமிழகத்திலிருந்து இலங்கைக்கான அதி சொகுசு உல்லாச கப்பல் சேவை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இலங்கை சுற்றுலா சபையின் தலைவர் கிமார்லி பெர்னாண்டோ இந்த விடயத்தைத் தெரி வித்துள்ளார்.

இந்தியாவால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த சேவை இலங்கைக்கான முதலாவது உல்லாச கப்பல் சேவை எனவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

இந்த சேவையின் முதலாவது பயணம் சென்னையிலிருந்து ஆரம்பிக்கப்படவுள் ளது.

குறித்த கப்பல் தங்கும் அறை வசதி முதல் பயணிகளின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்பு களை பூர்த்தி செய்யக்கூடியவாறு வடிவமைக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பலில் பயணிக்க விரும்பும் பயணி கள் இரண்டு தடுப்பூசிகளைப் பெற்றிருப்பது அவ எனவும் தொற்று ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையை வைத்திருக்க வேண்டுமென வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் 50 ஆவது மாநாடு கொழும்பில்!

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 50 ஆவது வருடாந்த மாநாடு கொழும்பில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 05 ஆம் திகதி முதல் 08 ஆம் திகதி வரை கொழும்பில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

IIS
26 வருட கால கல்வி அனுபவத்துடன் இணைந்து எதிர்காலத்தை உங்களுடையதாக்குங்கள்

Pearson BTEC
**HND**



COMPUTING
CIVIL ENGINEERING
BUSINESS MANAGEMENT

**IIS தனித்துவம்**

- மூன்றாம் நிலைக்கல்வி தொழில்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) அங்கீகாரம்
- PEARSON பிரதிநிதிகளின் நேரடி வருகையும் கண்காணிப்பும்
- தொழில்சார் பயிற்சியுடனான கற்கைநெறிகள்
- உயர்கல்விக்கே உரித்தான வளாகம்
- பட்ட மேற்படிப்புக்களை உடனடியாக மேற்கொள்ளும் வாய்ப்புக்கள்
- இலகு தவணை முறையிலான கட்டண வசதிகள்
- வேலை வாய்ப்புக்களை இலகுவாக பெறக்கூடிய சந்தர்ப்பங்கள்

கல்விப்பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தின் ஓர் கல்விச்சாம்ராஜ்யம்

IIS CITY CAMPUS
441 ,CLOCK TOWER ROAD, JAFFNA
021 222 8060 | 071 777 4666
Info @ iis.lk

**Director, Jaffna College Institute of Technology Calls for the following courses**

**Civil Draughtperson (one year)**
Minimum Qualification Passed G.C.E.(OL) with pass in Mathematics & English
**Course leads to:**
- Follow courses in level 5
- Register for drawings at local councils

**Computer Certificate Courses**
**(3 - 4 months Part time)**
- Certificate in MS OFFICE - (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer - (Page Maker, PhotoShop & CorelDraw)
- Web Designing (HTML, CSS, JAVA Script PHP, MYSQL)
- JAVA, C++ Programming

**Foundation in Information Technology**
**(FIT) (6 months part time)**
Pre degree course leads to Bachelor|s in Information Technology (BIT), University of Colombo.

**Commencement in the 2nd week of March 2022**
**The Courses will be conducted at our Jaffna Centre too**
**(Jaffna College Undergraduate dept. Building)**
**464 Hospital Road, Jaffna.**
**For further details contact**
**Tel no: 0212250975 0212223382**
**Email: ejcitsltnet.lk.**

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I    English for all    Sunday the 13th of March 2022


We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com

## Identify what TYPE of adverb phrase this is. Underline the correct answer.

**1. The woman stared at me with an angry expression.**



time    purpose
manner    frequency
place

**2. Janice placed the chair next to the window.**



time    purpose
manner    place
frequency

**3. Joe buys flowers for his wife every week.**



time    place
purpose    manner
frequency

**4. I bought the glue to fix my broken lamp.**



frequency    place
purpose    time
manner

**5. Surfing is a popular sport in the summer.surfer**




purpose    manner
place    frequency
time

**6. I wear woolly socks to keep my feet warm.**



time    frequency
purpose    place
manner

**7. Elephants are found in Africa and India.**




purpose    time
manner    frequency
place

**8. It rained hard yesterday.**




manner    place
purpose    time
f    requency

**9. I'll meet you on Friday.**



frequency    purpose
time    manner
place

**20. We hardly ever use the microwave.**



manner    time
frequency    purpose
place

## Underline the adverb phrases in the following sentences.

Notes: An adverb phrase is a group of words that serves the same purpose as an adverb.

1. She lives in a palatial home.
2. Is there water on the moon?
3. She ran into her room.
4. They chatted for a while.
5. She performed the task with great skill.
6. The desert stretched towards the north.
7. The gun went off with a loud noise.
8. The fishers went sailing over the sea.
9. He lay beside the heap of corn.
10. She whispered in his ear.
11. He fought with all his might.
12. He shouted at the top of his voice.
13. It must be done at any cost.
14. Much water has run under the bridge.
15. Without pausing to consider he struck the blow.

*Answers*

1. in a palatial home
2. on the moon
3. into her room
4. for a while
5. with great skill
6. towards the north
7. with a loud noise
8. over the sea
9. beside the heap of corn
10. in his ear
11. all his might
12. at the top of his voice
13. at any cost
14. under the bridge
15. without pausing to consider

## Comment adverbs and adverbial phrases.



1. Comment adverbs give the speaker's opinion.
**Personally, I don't think this is a good idea.**
2. Some adverbs can be used as both comment adverbs and as adverbs of manner.
**Frankly, she is not keen on horror films. She spoke frankly about her family problems.**
3. We usually put comment adverbs at the start of the sentence, although they can go with the verb.
**Foolishly, Ted left his driving license at home. Ted foolishly left his driving license at home.**

**1) Choose two correct answers for each of the following sentences.**

1. ________, I'll pass my driving test before my eighteenth birthday.
a) Luckily    b) Ideally    c) Hopefully    d) Foolishly

2.__________, he offered to pay for the meal.
a) Ideally    b) To my surprise    c) Luckily    d) Frankly

3.__________, I'll get this job. I've had enough of being unemployed.
a) Not surprisingly    b) Ideally    c) Luckily    d) Hopefully

4. __________, Ann accepted a ride in a stranger's car.
a) Stupidly    b) Frankly    c) Foolishly    d) Ideally

5. John's been feeling sick all day, so ____, he won't be going to the gym tonight.
a) obviously    b) to my surprise    c) fortunately    d) not surprisingly

6. _____, his son doesn't disagree with him, so they have come to an agreement.
a) Stupidly    b) Fortunately    c) Personally    d) Not surprisingly

**You must be the change you wish to see in the world - Mahatma Gandhi**

# Brief History of Sri Lanka

Sri Lanka is an island nation off the southern coast of India. It was once known as the country of Ceylon. The first inhabitants arrived around 500 BC. Buddhism came to Sri Lanka in the mid-third century BC and had a large impact on the culture. The first great civilization to develop was at the city of Anuradhapura which ruled from 200 BC to 1000 AD. This was followed by Polonnaruwa until 1200. The island had contact over the years with many civilizations including the Romans and the Arabs.

In the 16th century the Portuguese arrived. They made settlements along the coast. The Dutch followed around 100 years later. In 1796 the British arrived and kicked out the Dutch. They made the island the British colony of Ceylon in 1815. The island was under British control until 1948 when Ceylon became an independent nation.

Ceylon began to adopt communism and made ties to the Soviet Union, however in 1972 it adopted a new constitution and became a republic. This was when the name of the country changed to Sri Lanka.

### The Geography of Sri Lanka

**Total Size:** 65,610 square km
**Geographical Coordinates:** 7 00 N, 81 00 E
**World Region or Continent:** Asia
**General Terrain:** mostly low, flat to rolling plain; mountains in south-central interior
**Geographical Low Point:** Indian Ocean 0 m
**Geographical High Point:** Pidurutalagala 2,524m
**Climate:** tropical monsoon; northeast monsoon (December to March); southwest monsoon (June to October)
**Major cities:** COLOMBO (capital) 681,000 (2009), Dehiwala-Mount Lavinia

### The People of Sri Lanka

**Type of Government:** republic
**Languages Spoken:** Sinhala (official and national language) 74%, Tamil (national language) 18%, other 8%
**Independence:** 4 February 1948 (from UK)
**National Holiday:** Independence Day, 4 February (1948)
**Nationality:** Sri Lankan(s)
**Religions:** Buddhist 69.1%, Muslim 7.6%, Hindu 7.1%, Christian 6.2%, unspecified 10% (2001 census provisional data)
National Symbol: lion
**National Anthem or Song:** Sri Lanka Matha (Mother Sri Lanka)
Economy of Sri Lanka
**Major Industries:** processing of rubber, tea, coconuts, tobacco and other agricultural commodities; telecommunications, insurance, banking; clothing, textiles; cement, petroleum refining
**Agricultural Products:** rice, sugarcane, grains, pulses, oilseed, spices, tea, rubber, coconuts; milk, eggs, hides, beef; fish




**Natural Resources:** limestone, graphite, mineral sands, gems, phosphates, clay, hydropower
**Major Exports:** textiles and apparel, tea and spices; diamonds, emeralds, rubies; coconut products, rubber manufactures, fish
**Major Imports:** textile fabrics, mineral products, petroleum, foodstuffs, machinery and transportation equipment
**Currency:** Sri Lankan rupee (LKR)
National GDP: $116,300,000,000

# Root System

The plants that we see today is the result of billions of years of evolution. Today, plants cover almost 30 per cent of the total landmass and account for the 50 per cent of the plant's productivity (generation of biomass). Plants fulfil many roles in the ecosystem. They are a source of food, nutrition, shelter, maintain the integrity of soil (by preventing erosion) and most importantly, they are the main source for balancing the oxygen level in the atmosphere.

Anatomically, plants are very complex organisms and are classified into various types based on certain defining characteristics. Roots are very important structures that provide a variety of functions, but contrary to popular belief, all plants do not have roots. Roots are absent in plants like mosses and liverworts.

### What are Roots?

Roots are the important underground part of all vascular plants. This part of the plant is mainly responsible for anchoring it down into the ground and absorbing the essential mineral elements, nutrients, and water from the soil. It is also used to store food.

However, not all plants have their roots underground, some plants have their roots growing above the ground. These are called aerial roots. Alike underground roots, these aerial roots are also responsible for absorbing nutrients, anchoring and affixing the plant by supporting them to the structures such as nearby walls, rocks, trellises, etc.

Few examples of plants with the aerial roots are–Bonsai, Banyan Tree, Mangroves, etc.

### Types of Roots


All roots have similar functions, however, their structure varies. Hence, based on these criteria, the root system is classified into two types:

### TapRoot System

Taproots have a main central root upon which, small, lateral roots called root hairs are attached. Mustard, carrot, beetroot, parsley, china rose and all dicotyledons are examples of taproot systems.

### Fibrous Root System

Fibrous roots, on the other hand, are bushy roots in which thin, moderately branching roots grow from the stem. Rice, wheat, maize, marigold, banana and all monocotyledons are some examples of the fibrous root system.




### Functions of Root

Roots perform various functions that are necessary for the survival of the plants. They are an integral or integrated system that helps the plant in:

***Anchoring:*** Roots are the reason plants remain attached to the ground. They support the plant body, ensuring that it stands erect.

***Absorption:*** Primary function of the roots is to absorb water and dissolved minerals from the soil. This is crucial as it helps in the process of photosynthesis.

***Storage:*** Plants prepare food and store in the form of starch in the leaves, shoots and roots. Prominent examples include carrots, radish, beetroot, etc.

***Reproduction:*** Even though roots are not the reproductive part of plants, they are vegetative parts. In some plants, the roots are a means of reproduction. For instance, new plants arise from creeping horizontal stems called runners (stolons) in jasmine, grass, etc. This type of reproduction is called vegetative propagation.

***Ecological Function:*** They check soil erosion, provide sustenance and also habitat to various organisms.

# மருத்துவக் கதிர்

# சிறுநீரகக் கற்களிற்கான காரணங்களும் அதற்கான தீர்வுகளும்



டாக்டர் ஆஷா லெனின்
தமிழ்நாடு, இந்தியா

சிறுநீரகக் கற்கள் என்பது சிறிய படிகங்களைக் கொண்ட ஒரு திடப்பொருள் ஆகும்.பாராதைரைட்டு சுரப்பியானது தைரோய்டு சுரப்பிக்குப் பின்னால் அமைந்துள்ளது. பாராதைரைட் சுரப்பியானது இரத்தத்திலுள்ள கல்சியத்தின் அளவைச் சீராக்குகின்றது. இது இரத்தத்தில் கல்சியம் அதிகமாக இருப்பின் என்பில் கல்சியத்தை படியச் செய்வதோடு இரத்தத்தில் கல்சியம் குறைவாக இருந்தால் என்பிலுள்ள கல்சியத்தை இரத்தத்தில் சேர்க்கும். இதற்கு கல்சியம், விற்றமின் D என்பன அவசியமாகும்.

சிறுநீரகக் கற்கள் பொதுவாக விட்டமின் ம் குறைபாடு, பாராதைரைட் சுரப்பியின் ஒழுங்கீனம்,தேநீர் அதிகளவில் குடித்தல், சொக்லேட் அதிகளவில் சாப்பிடுதல், சிறுநீரை அதிக நேரம் வெளியேற்றாமல் இருத்தல், வியர்வை வெளியேற்றத்திற்கு ஏற்ப தண்ணீர் குடிக்காமல் இருத்தல், வளிச்சீராக்கிகள் உள்ள அறைகளில் இருக்கும் போது சிறுநீர் உற்பத்தி அதிகமாக இருக்கும் அடிக்கடி சிறுநீர் வெளியேற்றம் ஏற்படும். எனினும் சிறுநீர் வெளியேற்றத்திற்கு ஏற்ப தண்ணீர் குடிக்காமல் இருப்பின் சிறுநீரகக் கற்கள் ஏற்படும்.


சாதாரண அறைகளில் இருப்பவர்களை விட வளிச்சீராக்கிகள் உள்ள அறைகளில் இருப்பவர்கள் அதிகமாகத் தண்ணீர் குடிக்க வேண்டும். ஏனெனில் வளிச்சீராக்கிகள் உள்ள அறைகளில் இருப்பவர்களுக்கு வியர்வை வெளியேற்றம் குறைவாக இருக்கும் இதனால் தாகம் ஏற்படுவது குறைவாக இருக்கும்.

முதுகுவலி, வாந்தி, அடிக்கடி சிறுநீர் கழித்தல், இடுப்பு வலி, சிறுநீர் அளவு அதிகரித்தல், சிறுநீரில் இரத்தம் காணப்படுதல், அடிவயிற்றில் வலி காணப்படுதல், வலியோடு சிறுநீர் கழித்தல், இரவு நேரத்தில் அதிக அளவு சிறுநீர் கழித்தல், சிறுநீரில் தொற்று காணப்படுமாயின் குளிர்காய்ச்சல் காணப்படுதல் என்பன சிறுநீரகக் கற்கள் இருப்பதற்கான அறிகுறிகளாகும்.

சிறுநீரகக்கற்கள் பல வகைப்படும் அவையாவன யூரிக் அமில கற்கள் **(uric acid stones)**, சிஸ்டைன் கற்கள் **(cystine stones)**, ஸ்ட்ரூவைட் கற்கள் **(struvite stones)**, கல்சியம் கற்கள் **(calcium stones)**, கல்சியம் ஒக்சலேற் கற்கள் **(calcium oxalate stones)**, ஸ்டாகிறோன் கற்கள் **(staghorn stones)** என்பனவாகும். கல்சியம் கற்கள் பால்பொருள்களை அதிகளவில் உணவில் சேர்ப்பதால் உருவாகின்றது. கல்சியம் ஒக்சலேற் கற்கள் கீரை, தக்காளி, பால்ப் பொருள்களை அதிகளவில் உண்பதால் உருவாக்குகின்றது.

யூரிக் அமில கற்கள் பால் அதிகளவில் குடிப்பதாலும் மாட்டு இறைச்சி, முட்டை, மீன், ஆட்டு இறைச்சி, சிவப்பு பீன்ஸ் ஆகியவற்றை அதிகளவில் உண்பதாலும் யூரிக் அமிலம் அதிகளவில் உடம்பில் உருவாக்கப்படுகின்றது. இது கீழ் வாத நோயை **(Gout)** உருவாக்குகின்றது. கீழ் வாத நோயானது கால் கட்டை விரலைப் பாதிக்கின்றது. யூரிக் அமில கற்களை அலட்சியமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இது பிற்காலத்தில் சிறுநீரக செயலிழப்புக்கு காரணமாக அமையலாம். எனவே இவர்களுக்கு இரத்தத்தில் யூரிக் அமில அளவை பரிசோதிப்பதோடு யூரிக் அமில கற்களையும் பரிசோதனைக்கு உட்படுத்தி அவர்களுடைய அசைவ உணவு உள்ளெடுத்தலை குறைக்க வேண்டும். இதன் மூலம் யூரிக் அமில உற்பத்தியைக் குறைக்கலாம்.

ஸ்ட்ரூவைட் வகைக் கற்கள் சிறுநீரகங்களில் கிருமித் தாக்கத்தால் வருகின்றன. சிஸ்டைன் வகைக் கற்கள் சிறுநீரக பிரச்சினை அல்லது பரம்பரை **(Genetics)** காரணமாக வருகின்றன. ஸ்டாகிறோன் கற்கள் மான் கொம்பு போன்ற தோற்றத்தை உடையன. இது அதிக வலியை ஏற்படுத்தக் கூடியது. இதனை லேசர் **(Laser lithotripsy )** மூலமாக உடைத்து வெளியேற்ற வேண்டும். லேசர் மூலம் சிறுநீரகக் கற்கள் சிறிய துண்டுகளாக உடைக்கப்படுகின்றன.லேசர் மூலம் சிறுநீரக கற்களை உடைக்கும் போது சிறுநீரகத்தில் உள்ள செல்களுக்கும் பாதிப்பு ஏற்படலாம். எனவே **2cm - 3cm** வரையுள்ள பெரிய கற்களையே லேசர் மூலம் உடைக்க வேண்டும்.




புரோஸ்டேட் என்பது ஆண்களிலுள்ள சுரப்பி ஆகும். இது சிறுநீர்ப்பையின் கழுத்தில் சிறுநீர்க்குழாயைச் சூழ்ந்துள்ளது. சிறுநீர்ப்பை கழுத்து என்பது சிறு நீர்ப்பையில் சிறுநீர்க்குழாய் சேரும் பகுதி.இது சிறுநீர்ப்பைக்குக் கீழே மலக்குடலுக்கு முன்னால் உள்ளது. பொதுவாக ஆண்களுக்கு 40 வயதிற்கு மேல் புரோஸ்டேட் ஹைபர்டிராபி **(Prostate hypertrophy)** ஏற்படுகின்றது. இது புரோஸ்டேட் திசுக்களின் அதிகப்படியான வளர்ச்சி சிறுநீர்க்குழாய் மற்றும் சிறுநீர்ப்பைக்கு எதிராகத் தள்ளப்பட்டு, சிறுநீரின் ஓட்டத்தைத் தடுக்கின்றது. இது பின்புறமாக ஆசன வாயிலையும் அமுக்குகின்றது. இதனால் மல வெளியேற்றம் கடினமானதாக இருக்கும். புரோஸ்டேட் ஹைபர்டிராபி காரணமாக சிறுநீர் வெளியேற்றத்தின் பின்னர் சிறுநீர்ப்பையில் சிறுநீர் காணப்படக் கூடாது. எனினும் புரோஸ்டேட் ஹைபர்டிராபி காரணமாக சிறுநீர் வெளியேற்றத்தின் பின்னர் சிறுநீர்ப்பையில் சிறுநீர் காணப்பட்டு சிறுநீரகக் கற்கள் வர காரணமாக அமையும். இதனால் சிறுநீரக செயலிழப்பு ஏற்படலாம்.

நீரிழிவு நோயில்லாத ஆண்களுக்குக் கூட இரவு நேரத்தில் அடிக்கடி சிறுநீர் வெளியேற்றம் ஏற்படுமாயின் கண்டிப்பாக அடிவயிற்றை ஸ்கான் செய்து புரோஸ்டேட் ஹைபர்டிராபி உள்ளதா என பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். புரோஸ்டேட் ஹைபர்டிராபியின் அதிகரித்த விளைவினால் சிறுநீர் வெளியேற்றம் தடைப்படக்கூடும்.

30 - 35 வயதிற்கு மேல் பொதுவாக இரத்த அழுத்தம், பரம்பரை, நீரிழிவு, அதிகளவு மது அருந்துதல் காரணமாக சிறுநீரக செயலிழப்பு ஏற்படலாம். சிறுநீரகம் பழுதடைந்திருப்பதற்கான அறிகுறியாக அசாதாரணமான அளவு புரதம் வெளியேறுகிறதா என்பதையும் சிறுநீர் பரிசோதனைகள் மூலம் கண்டறியலாம்.




### அல்ட்ராசௌண்ட் (Ultrasound)

இந்தச் சோதனையானது சிறுநீரகத்தின் படத்தைப் பெற ஒலி அலைகளைப் பயன்படுத்துகின்றது. சிறுநீரகத்தின் அளவு அல்லது நிலையில் உள்ள அசாதாரணங்களைக் கண்டறிய அல்லது கற்கள் அல்லதுகட்டிகள்போன்றதடைகளுக்கு இது பயன்படுத்தப்படலாம்.

### CT ஸ்கான்

இந்த நுட்பம் சிறுநீரகங்களைப் படம்பிடிக்க எக்ஸ் - கதிர்களைப் பயன்படுத்துகிறது. கட்டமைப்பு அசாதாரணங்கள் மற்றும் தடைகள் இருப்பதைக் கண்டறியவும் இது பயன்படுத்தப்படலாம்.

### சிறுநீரக பயாப்ஸி (Kidney biopsy)

ஒரு குறிப்பிட்ட நோய் செயல்முறையை அடையாளம் கண்டு, அது சிகிச்சைக்குப் பதிலளிக்குமா என்பதை தீர்மானிக்க சிறுநீரகத்தில் ஏற்பட்ட சேதத்தின் அளவை மதிப்பிடுவதற்கு இந்த நுட்பம் பயன்படுத்தப்படலாம்.

### சிறுநீர்ப் பரிசோதனைகள்

சிறுநீர்ப் பரிசோதனையானது சிறுநீரகம் எவ்வளவு சிறுநீரை உற்பத்தி செய்கின்றது என்பதைக் காட்டுகின்றது. சிறுநீரகம் எவ்வளவு நன்றாக வேலை செய்கின்றது மற்றும் ஒரு நாளில் சிறுநீரகத்திலிருந்து சிறுநீரில் எவ்வளவு புரதம் கசிகின்றது என்பதை அளவிடலாம். நாள்பட்ட சிறுநீரக நோய், நீரிழிவு நோய், சிறுநீர்ப்பை நோய்த்தொற்றுக்கள் மற்றும் சிறுநீரக கற்கள் உள்ளிட்ட சிறுநீரக மற்றும் சிறுநீர்ப் பாதை கோளாறுகளை கண்டறிய சிறுநீர் பகுப்பாய்வு உதவும்.

சிறுநீரகக் கற்களை வெளியேற்றுவதற்காக சிறுநீரகப் பாதை வழியாக தொடர்ச்சியாக குழாயை உட்செலுத்தி வெளியே எடுக்கும் போது சிறுநீர்க்குழாய் சுருங்கி விட **(Urinary stricture)** வாய்ப்புண்டு. இதனால் சிறுநீரை வெளியேற்றும் போது எரிச்சல், சிரமம் ஏற்படும். ஒரு வருடத்திற்கு ஒரு முறை ஸ்கான் செய்து பார்ப்பதன் மூலம் சிறு கற்கள் இருந்தால் அவற்றை மருந்துகள் மூலம் வெளியேற்றி விடலாம். இவ்வாறு மருந்துகள் சாப்பிட்டு கற்கள் வெளியேற்றப்படும் போது சில வேளைகளில் குருதி வெளியேற்றமும் காணப்படும்.

சிறுநீரகக் கற்கள் உள்ளவர்கள் வைத்தியர்களிடம் அவர்களுக்கு வரும் கற்களைப் பரிசோதித்து அவை எந்த வகையானவை என அறிந்து அதற்கான உணவு முறைகள், கற்கள் வரமால் தடுப்பதற்கான வைத்திய முறைகள் ஆகியவற்றைப் பின்பற்ற வேண்டும். ஒரு நாளைக்கு **2l - 3l** தண்ணீராவது குடிக்க வேண்டும். அத்துடன் **1.5l** சிறுநீரானது வெளியேற்றப்பட வேண்டும்.ஆரோக்கியமான இரத்த அழுத்தத்தைப் பேணுதல், நீரிழிவு நோயாளர்கள் தமது இரத்த சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்தல், உணவில் உப்பு குறைவாகப் பயன்படுத்தல், ஆரோக்கியமான எடையை வைத்திருத்தல், புகைப்பிடித்தல், மது அருந்துதல் ஆகியவற்றைத் தவிர்த்தல், தினமும் குறைந்தது 30 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்தல் ஆகியன மூலம் சிறுநீரகங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.

உணவில் அதிகளவு காய்கறிகள், பழங்கள், முள்ளங்கி, வாழைத்தண்டு, வாழைப்பூ ஆகியவற்றைச் சேர்ப்பதோடு அதிகளவில் நீராகாரங்களான இளநீர் மற்றும் தேசிக்காய், தோடம்பழம் போன்ற சிட்ரஸ் பழங்களின் சாற்றினையும் குடிக்க வேண்டும். சிட்ரஸ் பழங்கள் சிறுநீரகக் கற்களின் உற்பத்தியைத் தடுக்கும் ஆற்றல் கொண்டது. பார்லி அரிசியுடன் அரைவாசி எலுமிச்சம் பழத்தோல், ஒரு துண்டு இஞ்சி, 2 மிளகு சேர்த்து 1 டம்ளர் நீர் சேர்த்து அரை டம்ளர் ஆகும் வரை கொதிக்க வைத்து குடித்தால் உடலில் நீர் தேங்குவது தடுக்கப்படும். சிறுநீரக நோயாளர்கள் வைத்திய ஆலோசனை இன்றி மருந்துகளை உள்ளெடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

இலக்கிய நயம்

# காதல் பித்தேறிய தலைவன் கூறும் அழகான பாடல்

யாழ். மகள் சைந்தவி



உண்மையாக காதலிக்கும் போது ஆண்களுக்கு தன் காதலி தேவதைப் போல் தான் காட்சி அளிக்கிறாள். அவளின் ஒவ்வொரு அசைவும் ஓராயிரம் கவிதைகளை சொல்கிறது, அவளின் நெருக்கம் சுகமாக இருக்கிறது, சிறிய பிரிவும் பெரிதாக வலிக்கிறது. கோபமும் சின்ன ஊடலும் கூட சுவையாகத் தான் இருக்கிறது. காதலில் விழும் போது ஒருவனின் இதயம் வேலை செய்யத் தொடங்குகிறது, ஆனால் அவன் மூளை வேலை செய்வதை நிறுத்திவிடுகிறது, இதனால் தான் உலகில் உள்ளோர் காதல் பித்து பிடித்தவன் என்று கூறுகின்றனர். இப்படி காதலியின் நெருக்கத்தை உணர்ந்து காதல் பித்தேறிய தலைவன் கூறும் அழகான பாடல் இது. குறிஞ்சி திணையில் வரும் பாடல் இது -

**ஒடுங்கு ஈர் ஓதி ஒள் நுதற் குறுமகள்**
**நறுந் தண் நீரள், ஆர் அணங்கினளே,**
**இனையள் என்று அவட் புனை அளவு அறியேன்,**
**சில மெல்லியவே கிளவி,**
**அனை மெல்லியல் யான் முயங்குங்காலே.**

அதாவது - அழகாக ஒடுங்கிய அடர்த்தியான கூந்தலை உடையவள், பிறை போல் வளைந்த வாசனை நெற்றியை உடைய சின்னப் பெண், சுவையான குளிர்ந்த நீரைப் போன்றவள் என் தலைவி , அவளைப் பிரிந்தால் வருத்தம் தருகிறாள், அவள் இப்படிப் பட்டவள் தான் என்று எனக்கு சொல்லத் தெரியவில்லை , அவளைப் பற்றி சொல்ல வார்த்தையில்லை. கொஞ்சம் தான் பேசுகிறாள், ஆனால் திரும்ப திரும்ப அவள் பேச்சை கேட்க வேண்டும் என்று தோணுகிறது, அணைக்கும் போது மென்மையான இலவம் பஞ்சால் செய்யப்பட்ட தலையணை போல் மென்மையாக இருக்கிறாள்.

ஒரு ஆடவனுக்கு உள்ள ஐம்புலன்களும் பெண்ணால் சுகப்படுகிறது என்று இந்த பாடல் அழகாகக் கூறுகிறது. தலைவியின் கூந்தலை காண்பது கண்ணுக்கு விருந்தாகவும், அவளின் வாசனை நெற்றியை உச்சி நுகர்தல் மூக்கிற்கு இன்பமாகவும், சுவையான குளிர்ந்த நீர் போல் இருக்கும் அதரம் சுவைக்க இன்பமாகவும், அவளின் சுவையான பேச்சு காதுக்கு இன்பமாகவும், அவளின் மென்மையான உடலை கட்டித் தழுவுவது உடலுக்கு (மெய்யுக்கு) இன்பமாகவும் இருப்பதாக இந்த பாடல் கூறுகிறது, அவளின் நெருக்கம் இன்பத்தையும் பிரிவு துன்பத்தையும் தருகிறது.

வள்ளுவனும் இதைத் தான் கூறுகிறான்.

**கண்டு கேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்**
**ஒண்தொடி கண்ணே உள**

இவளைக் கண்டு கண்கள் இன்புறுகிறது, இவளின் பேச்சை கேட்டு காதுகள் இன்புறுகின்றன, இவளின் இதழை உண்டு நாக்கு இன்புறுகிறது, இவளின் வாசனை நுகர்ந்து மூக்கு இன்புறுகிறது, இவளின் அணைப்பில் என் உயிர் (மெய்) இன்புறுகிறது, என் ஐந்து புலன்களும் இன்பமும் இவளிடம் உள்ளது.

**நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்**
**தீயாண்டுப் பெற்றாள் இவள்**

இந்த உலகில் உள்ள அதிசயமான நெருப்பு என் தலைவி, பொதுவாக நெருப்பின் அருகில் சென்றால் சுடும், அதிலிருந்து தூரமாக விலகினால் குளிரும். ஆனால் இவள் அருகில் சென்றால் குளிர்கிறது, இவளை விட்டு தூரமாகச் சென்றால் சுடுகிறது. இப்படிப் பட்ட வித்தியாசமான காதல் நெருப்பை எங்கு பெற்றாள் இவள் ?

# பட்ட மரமும் பச்சைக் கொடியும்




சி .ஜெயகுகன்
கொழும்பு

சீலன் கடை வைத்தான், கோபி கடையில் விற்பனையாளனாக இருந்தான். சீலனின் சின்னத் தங்கை கடைக்குப் பொருள்கள் வாங்க வந்தாள். அப்போது அவர்களின் அயல் வீட்டு நண்பனும் இவர்களுடன் ஒன்றாக சேர்ந்து கொண்டான். சீலனும் குகனும் தங்களைப் போர் வீரர்களைப் போல பாவனை செய்து கொண்டு மண்கட்டிகளைச் சேகரித்து ‘செல் அடிக்கப்போறம் ஓடுங்கோ’ என்று கத்தினர். சிறிது நேரத்தில் சிறுவர்கள் தம் கையில் கிடைத்தவற்றை எடுத்துக் கொண்டு வளவின் மறு மூலைக்கு ஓடினர். அப்போது அங்கே வந்த சீலனின் பெரியம்மா ‘பிள்ளைகள் மண்ணாங்கட்டியால எறியாதிங்கோ, வேற விளையாட்டு விளையாடுங்கோ’ என்று கூறிவிட்டுச் சென்றார்.

அத்துடன் சிறுவர்கள் வேறு விளையாட்டுக்கள் விளையாடச் சென்றனர். அடுத்த நாள் பெரியம்மா வீட்டிற்கு அருகில் ஓர் கொட்டில் அமைத்து அதில் குடியேறினர். “ஏனம்மா பெரியம்மாவையின்ர வீட்டில் இடம் இருக்குத்தானே அவயோட இருக்கலாம் தானே” என்றான் சீலன். “இல்லைத் தம்பி ஒரு வீட்டிலே இரண்டு குடும்பம் இருக்கேலாது” என்றாள் அம்மா. “ஏனம்மா பெரியம்மா உங்கடை அக்கா தானே? பேந்தேன் இருக்கேலாது?” என்று கேட்டான். சீலன் “தம்பி அது உங்களுக்கு விளங்காது” என்று சற்று அழுத்திக் கூறினாள் அம்மா. அன்று பின்னேரம் ஊஞ்சல் ஆடும் போது நூறு தரத்திற்கு மேல் ஆடிய குகனை இறங்கச் சொன்னான் சீலன். அதற்கு குகன் “இது எங்கடை ஊஞ்சல் நான் விடமாட்டன்” - என்றான். “ஏன் இனி என்ர முறை தானே?” என்றான் சீலன். இருவரும் விடாப்பிடியாக பிடிவாதம் பிடித்ததால் இருவருக்கும் இடையில் மனக் கசப்புத் தோன்றியது.

சீலன் அழுது கொண்டு அம்மாவிடம் வந்து சேர்ந்தான். “தம்பி இது எங்கடை வீடில்லை நாங்கள் தான் விட்டுக்கொடுத்து நடக்க வேணும்” என்றார் அம்மா. “ஏன் அவர் நூறு தரம் ஆடிவிட்டார் தானே” என்றான் சீலன். “இல்லைத் தம்பி நாங்கள் அகதியள்” என்றாள் அம்மா. “அம்மா நாங்கள் எங்கடை வீட்ட போவம்” என்று மறுபடியும் அழுதான் சீலன். ‘‘நாங்கள் கெதியா திரும்பி போயிடலாம்” என்ற நம்பிக்கையை பொய்யாக்கிக் கொண்டு நாள்கள் தம் வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தன.

அன்று சீலனை அருகில் இருக்கும் பாடசாலையொன்றில் சேர்ப்பதற்காக அவனது அம்மா அழைத்துக் கொண்டு போனார். பாடசாலையில் இருந்த அதிகாரி ஒருவர் ஒரு விண்ணப்பப் படிவத்தை நிரப்புவதற்காக அம்மாவிடம் கேள்வி கேட்கத் தொடங்கினார். “மகன்ர பெயர் என்ன?” என்று முதற் கேள்வியைக் கேட்டார் அதிகாரி. பின்னர் முகவரி “எங்கட நிரந்தர விலாசம் சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாய் இப்ப எங்கடை விலாசம் 584, யாழ் வீதி, சாவகச்சேரி” என்றாள் அம்மா சற்றுத் தடுமாற்றத்துடன். அந்த அதிகாரி மேலும் பல விவரங்களைக் கேட்டு விண்ணப்பப்படிவத்தில் எழுதினார். பின்னர் அவற்றை ஒரு கோப்பில் சேர்த்தார். பாடசாலை நிதிக்காக ஐந்நூறு ரூபா அறவிட்டார்கள். அம்மா அதைக் கொடுத்ததும் “நீங்கள் போங்கோ, நான் இவரை வகுப்பிலே கொண்டு போய் விடுகிறேன்” என்றார். அந்த அதிகாரி சீலனை ஓர் ஆசிரியையிடம் கொண்டு போய்ச் சேர்த்தார்.

அவனுக்கு ஒரு மேசையில் இடம் கொடுக்கப்பட்டது. தம்பி உங்களைப் பற்றி இவையளுக்கு சொல்லுங்கோ என்றார் அந்த ஆசிரியை, சீலனுக்கு தலையைச் சுற்றுவது போலிருந்தது. வகுப்பறையே அவன் பார்வையிலிருந்து பதிந்து உயர்வது போல் இருந்தது. மாணவர்கள் ஆவலுடன் அவன் சொல்லப் போவதை கேட்பதற்காக அமைதியுடன் இருந்தனர்.

சீலனுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. துக்கம், பயம் என்பன தொண்டையை அடைத்தன. அவனையறியாமலேயே அழுகை வந்துவிட்டது. சீலன் அழத்தொடங்கியதும் அந்த ஆசிரியை சரி பேந்து சொல்லுங்கோ இப்ப இருங்கோ என்றார். அவன் தன் இடத்தில் அமர்ந்து கொண்டான். சீலனின் மனதை இனம் புரியாத கவலை குடைந்தெடுத்தது. எல்லோரும் தன்னையே ஏளனமாகப் பார்ப்பது போலவும், தான்.

எல்லாவற்றிலும் மற்றவர்களைவிடத் தாழ்ந்த வகையில் இருப்பது போலவும் உணர்வு அவன் நெஞ்சத்தை பிழிந்தெடுத்தது.





# விவசாயி

## மீன் அமினோ அமிலத்துடனான சேதனக் கீரைச் செய்கை





கீரை என்பது ஊட்டச்சத்து நிறைந்த கொழுப்பு அற்ற நார்ப் பொருள் உணவு. கீரை நிறை உணவின் போது முக்கியமாக எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமானது. இதில் பின்வரும் சத்துக்கள் காணப்படுகின்றன.

**போசணைச் சத்துக்கள் அளவு**

சக்தி - 38 கிலோ கலோரி
நீர் - 82 கிராம்
புரதம் - 5 கிராம்
கனியுப்பு - 3 கிராம்
நார்ப்பொருள் - 6 கிராம்
காபோவைதரேற்று - 4 கிராம்
கல்சியம் - 330 மில்லி கிராம்
பொஸ்பரஸ் - 52 மில்லி கிராம்
இரும்பு - 19 மில்லி கிராம்

கீரை ஒரு மாதப் பயிராகும். கீரையை இந்த மாதத்தில் தான் பயிரிட வேண்டும் என்பதில்லை வருடம் முழுவதும் பயிரிடலாம். மீன் அமினோ அமிலத்தை பாவித்தல் மூலம் பூச்சித் தாக்கமற்ற தரமான கீரையை உற்பத்தி செய்யலாம். இது பூச்சி விரட்டியாகவும் பசளை மூலமாகவும் தொழிற்படும்.

**தயாரிக்கும் முறை:** 1 கிலோ மீன் கழிவுக்கு 1 கிலோ சக்கரை (சிறு துண்டுகளாக இடித்தது) எனும் வீதத்தில் கலந்து காற்றின்றிய நிலையில் 21 நாள்கள் மூடி வைத்தால், பழுத்த விளாம்பழ வாசனை கொண்ட தேன் போன்ற கரைசல் கிடைக்கும். இதை வடித்து 1 மாதம் வரை சேமிக்கலாம்.

கீரை செய்கைக்கு நல்ல மண்ணும், மணலும் கலந்த அமிலத்தன்மை கொண்டதாக இருந்தால் போதும் நன்றாக வளரும். முற்றிலும் மணல் கொண்ட நிலத்தை தவிர்க்கவேண்டும்.

உப்பு நீர் விதை முளைப்புத் திறனைப் பாதிப்பதால் முளைக்கும் வரை நல்ல நீரும் பின் செடி வளர்ந்த பின் ஓரளவு உப்பு நீரும் உபயோகிக்கலாம். கீரை வகைகள் அதிக சூரிய ஒளியில் அதிக விளைச்சல் தரவல்லது. 25 - 30 டிகிரி செல்சியஸ் என்ற வெப்பநிலையில் நன்கு வளரும்.

**நிலம் தயாரித்தல்:-** நிலத்தை மூன்று அல்லது நன்கு முறை நன்கு உழுது ஏக்கருக்கு 2.5 தொன்கள் நன்கு உக்கிய எருவை கடைசி உழவின் போது இட்டு மண்ணுடன் நன்கு கலக்கவேண்டும். பின் 1 மீற்றர் X 3 மீற்றர் என்ற அளவில் சமபாத்திகளும் பக்கத்தில் நீர்ப்பாசனத்திற்கு வாய்க்கால்களும் அமைக்க வேண்டும்.

**விதைத் தேவை:-** ஹெக்டேயருக்கு 2.5 கிலோ

விதைத்தல்:- விதைகள் மிகவும் சிறியவையாக இருப்பதால் சீராக விதைக்க விதையுடன் 2 கிலோ மணல் கலந்து பாத்திகளில் நேரடியாகத் தூவவேண்டும். பின் விதைகளின் மேல் மண் அல்லது மணலை மெல்லிய போர்வை போல் தூவி மூடி விடவேண்டும். பின்பு சிறிதளவு சாம்பலை தூவி விடுவதன் மூலம் எறும்புத்தாக்கத்தை குறைக்கலாம். இது பொற்றாசியச் சத்தையும் வழங்கும்.

**நீர்ப்பாசனம்:-** விதைத்தவுடன் பாத்திகளில் நிதானமாக நீர்ப்பாய்ச்ச வேண்டும். அப்போதுதான் விதைகள் ஒரு பக்கமாக அடித்துச் செல்லாமல் இருக்கும் அல்லது விதைகள் பாத்தியில் இருந்து வெளி வராது ஊற்ற வேண்டும். முளைக்கும் வரை ஒவ்வொரு நாளும் தண்ணீர் ஊற்றுதல் வேண்டும். கீரைகள் 6 - 8 நாள்களில் முளைத்து விடும். பின்னர் வாரம் ஒரு முறை பாத்திகளின் ஊடாக நீரை பாய்ச்ச வேண்டும். பிறகு 12 - 15 செ.மீ. இடைவெளியில் செடிகளை களைந்து விடுதல் வேண்டும்.

**பயிர் பாதுகாப்பு**

விதைத்து 10 ஆவது நாள் மீன் அமினோ கரைசலின் 200 மி.லீ ஐ 10 லீற்றர் நீரில் கலந்து கீரை செடிக்கு 7 நாள்களுக்கு ஒரு முறை தெளிக்க வேண்டும். இவ் வாறு தெளிப்பதால் கீரையில் இலையரிப் புளுக்களின் தாக்கம் ஏற்படாது அத்துடன் இது வளர்ச்சி ஊக்கியாகவும் தொழிற்படும். விதைத்த 21 நாள்களில் இருந்தே அறுவடை செய்யலாம்.

**அறுவடை**

**அறக்கீரை :-** விதைத்த 25 நாள்களில் தரையிலிருந்து 5 செ.மீ. அளவில் கிள்ளி எடுக்கவேண்டும். பின் 7 நாள்கள் இடைவெளியில் 10 முறை அறுவடை செய்யவேண்டும்.

**முளைக்கீரை :-** விதைத்த 21 - 25 நாள்களில் வேருடன் பறிக்கவேண்டும். சிறிய செடிகளை 10 நாள்கள் இடைவெளியில் மற்றொரு முறை அறுவடை செய் யலாம். மீன் அமினோ அமிலத்தை பயன்படுத்தி வீட்டுத் தோட்ட அளவிலும் பெரிய அளவிலும் கீரையை பயிர் செய்யமுடியும். இது மிகக் குறைந்த செலவுடன் நஞ்சற்ற முறையில் கீரையை உற்பத்தி செய்து சேதன விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான சிறந்த வழிமுறை ஆகும்.

**ஆக்கம்:- பிரியதர்ஷினி பன்னீர்ச்செல்வம்**
**பிரதி அதிபர்,**
**யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,**
**மருதனார் மடம்.**









# பாலதீவு புனித அந்தோனியார் கடல் கடந்த யாத்திரைத்தலப் பெருவிழா கரையோர கத்தோலிக்க மக்களை இணைக்கும் நிகழ்வாக இவ்வாரத்தில்

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

யாழ்ப்பாணம் மறைமாவட்டத்திற்குச் சொந்தமான பாலதீவு புனித அந்தோனியார் கடல் கடந்த யாத்திரைத் தல பெருவிழா கரையோர கத்தோலிக்க மக்களை இணைக்கும் பெருவிழாவாகும். தவக்காலத்தில் கொண்




டாடப்படும் இந்தக் கடல் கடந்த யாத்திரைத்தல பெருவிழா 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17,18 மற்றும் 19ஆம் திகதிகளில் கொண்டாடப்படுகிறது.

### பரிபாலகர் லியான்ஸ் அடிகளார் கருத்து

பாலதீவு புனித அந்தோனியார் தவக்கால யாத்திரைத்தல பெருவிழா பற்றிப் பரிபாலகர் ஏ.லியான்ஸ் அடிகளாரிடம் கேட்டபோது -

2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதி மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகும். பெருவிழாவானது மார்ச் மாதம் 19ஆம் திகதி காலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் மறைமாவட்ட குரு முதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையிலான திருநாள் திருப்பலியுடன் நிறைவடையும். திருப்பலியைத் தொடர்ந்து புனிதரின் பவனியும் திருச்சொரூப ஆசீரும் இடம் பெறும். கடல் வழிப்பயணத்தின் போது பாதுகாப்பு கவசங்களை அணிந்து செல்வது அவசியம் என்பதுடன் சிறிய படகுகளில் 9 பேருக்கு குறைவானவர்களையே ஏற்றிச் செல்லுமாறும் படகோட்டிகளைக் கேட்டுக்கொள்கிறோம். பாலதீவு புனித அந்தோனியார் தவக்கால கடல் கடந்த யாத்திரைத்தல பெருவிழாவின் போது ஆடம்பரங்களையும் களியாட்டங்களையும் அநாகரீக செயற்பாடுகளையும் தவிர்த்து ஆன்மீக செயற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். - என பாலதீவு புனித அந்தோனியார் யாத்திரைத்தல பரிபா லகர் மேலும் தெரிவித்தார்.

### 20 ஆயிரம் யாத்திரிகர்கள் கூடுவர்

அல்லைப்பிட்டி - குருநகர் - வலைப்பாடு முழுங்காவில் - இரணைமாநகர் - பள்ளிக்குடா - பூநகரி - நாவாந்துறை - ஆனைக்கோட்டை - நவாலி - மண்டைதீவு - யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை - மெலிஞ்சிமுனை - பள்ளிமுனை - பேசாலை - மன்னார் - ஆகிய இடங்களைச் சேர்ந்த ஏறக்குறைய 20 ஆயிரம் யாத்திரிகர்கள் ஆண்டு தோறும் பாலதீவு புனித அந்தோனியார் யாத்திரைத்தல பெருவிழாவில் பொதுவாக கலந்து கொள்கின்றனர்.

தவக்கால கடல்கடந்த யாத்திரைப் பெருவிழாவாக கொண்டாடப்படும் பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழா யாழப்பாணம், மன்னார் மறைமாவட்டங்களின் கரையோர கத்தோலிக்க மக்களை இணைக்கும் திருவிழாவாக அமைகிறது. இங்கு சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியது என்னவென்றால் கச்சதீவு புனித அந்தோனியார் பெருவிழாவும் பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழாவும் அரச வர்த்தமானி அறிவிப்புச் செய்யப்பட்ட விழாக்களாகும் என்பதாகும்.

பிரான்ஸ் நாட்டு எமில் வியார் அ.ம.தி அடிகளார் பிரெஞ் மொழியில் எழுதிய 'பாலைதீவு அல்லைப்பிட்டி மோசசும் பாலதீவு புனித அந்தோனியாரும்' என்ற ஆக்கம் தொம்மையப்பு யேசுதாசன் சந்திரன் அடிகளாரின் மொழிபெயர்ப்பில் தமிழ் மொழியாக்கம் செய்யப்பட்டு இவ்வாரம் காலைக்கதிர் தினசரி மற்றும் ஒன்லைன் பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழில் வெளியிடுகிறோம்.

இந்த ஆக்கத்தை மொழிபெயர்த்து தந்து தொம்மையப்பு யேசுதாசன் சந்திரன் அடிகளார் கொழும்புத்துறை புனித பிரான்சீஸ் சவேரியார் குருத்துவ கல்லூரியில் மெய்யியல்துறை விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். அவர் தான் எப்படி இவ்வாக்கத்தை பிரான்ஸ் நாட்டில் கண்டார் என்ற விளக்கத்துடன் பின்வருமாறு ஆரம்பிக்கிறார்:-

பிரான்ஸ் பாரிஸ் நகரிலே நான் பிரெஞ்ச் மொழியைக் 2000 - 2003 காலப்பகுதியில் கற்றுக்கொண்டிருந்த போது அங்கிருந்து 17 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்திருக்கும் அமல மரித்தியாகிகள் இல்லத்திலுள்ள நூலகத்தில் மோசசும் புனித அந்தோனியாரும் என்ற கட்டுரையை அமல மரித் தியாகிகளின் ஒரு பிரெஞ்சு சஞ்சிகையில் வாசித்தேன்.

பாலதீவு புனித அந்தோனியார் ஆலயத்தைக் கட்டி எழுப்ப தனது வலைகளுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு மறைமாவட்டத்தின் கிராமங்களைச் சுற்றிவந்து நிதி திரட்டி புனித அந்தோனியார் ஆலயத்தைக் கட்டிய சாதனை அல்லைப்பிட்டியைச் சேர்ந்த சுழியான் மோசசையே சேருமென்று இவரின் பங்குத்தந்தையாகவிருந்த (1924 -1934) எமில் வியார் அ.ம.தி. அடிகளார் எழுதியிருந்தமையைப் படித்து வியந்தேன்.

இக்கட்டுரையை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து கொழும்புத்துறை புனித பிரான்சீஸ் சவேரியார் குருத்துவ கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றும் லூயி பொன்னையா அ.ம.தி. அடிகளாரிடம் கொடுத்தேன். கட்டுரையைப் படித்த அவர் இக் கட்டுரையை தமிழாக்கம் செய்து பாலதீவு திருவிழாக்காலத்தில் பத்திரிகைகளில் பிரசுரிக்குமாறு என்னிடம் கேட்டுக்கொண்டார். அதன்படி உருவானதே இவ்வாக்கம்.

முதலில் எமில் வியார் அ.ம.தி அடிகளார் பற்றி தெரிவித்து விட்டு பின்னர் அவரின் கட்டுரையின் தமிழாக்கத்தை தருகிறேன்.

### யார் இந்த எமில் வியார் அ.ம.தி. அடிகளார்?

யார் இந்த எமில் வியார் அ.ம.தி. அடிகளார்? இவர் பிரான்ஸ் நாட்டின் றன் மறைமாவட்டத்திலே கோபூக் என்ற கிராமத்திலே விக்டர் மரி கிய்யோ என்ற பெற்றோருக்கு 1886ஆம் ஆண்டு சித்திரை மாதம் 5ஆம் திகதி பிறந்தார். இவர் 1911ஆம் ஆண்டு ஆடி மாதம் 10ஆம் திகதி குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். யாழ் மறைமாவட்டத்தில் கென்றி யூலன் ஆண்டகை ஆயராக இருந்தபோது இலங்கை நாட்டிலே கிறிஸ்தவ விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தோடு 1912ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 5ஆம் திகதி கொழும்பை வந்தடைந்தார்.

அங்கிருந்து மறைபணிக்காக அதிகாரிகள் இவரை யாழ் மறைமாவட்டத்திற்கு அனுப்பி வைத்தனர். இவர் தனது பணிவாழ்வை 1913இல் ஊர்காவற்றுறையிலும், 1914இல் மன்னார் அரிப்பிலும், 1916இல் முல்லைத் தீவிலும், 1918இல் பருத்தித்துறையிலும், 1924இல் பாஷையூரிலும், 1924 - 1934 வரை வழி மீசாம்களிலும் 1935இல் பள்ளிமுனையிலும், 1936 - 1942 மாதகலிலும் மேற்கொண்டார்.

தும்பளையிலும் மாதகலிலும் அமைந்திருக்கும் லூர்து அன்னையின் கெபிகள் இவர் பணியின் அழியாத சின்னங்களாக இன்றும் காட்சி தருகின்றன. 1924 - 1934 வரை இவரின் வழி மீசாம் பணிகள் சவால்கள் நிறைந்த பணிகளாகவும் பயணங்களாகவும் அமைந்தன.

இவ்வாறு சவால்கள் நிறைந்த இந்த வழி மீசாம் பணித்தளங்களில் ஒன்றாகிய அல்லைப்பிட்டி கிராமத்தில் எமில் வியார் அ.ம.தி. அடிகளார் மோசஸ் என்னும் அந்தோனியார் பக்தனை சந்தித்தார். இவரின் விசுவாசம் நிறைந்த வாழ்வையும் அர்ப்பணம் நிறைந்த சேவையையும் கண்டு இவரைப் பற்றி பிரான்சில் வாழும் கத்தோலிக்கர்களும் அறிந்துகொள்ள வேண்டுமென்று இக்கட்டுரையை அமல மரித் தியாகிகள் நடத்தும் ஒரு பிரெஞ்சு சஞ்சிகையில் பிரசுரித்தார்.

### எமில் வியார் அ.ம.தி. அடிகளாரின் கட்டுரை

பாலதீவு திருவிழாவை முடித்துக்கொண்டு சற்று முன்புதான் ஆயர் இல்லம் வந்து சேர்ந்தேன். பல நாள்கள் சூரியஒளி என்னை வாட்டியதால் என்னுடல் நீர்வற்றி காய்ந்திருப்பதுபோல உணர்கின்றேன். தூரத்திலிருக்கும் இத்தீவிற்கு மீண்டும் எப்போது செல்வேன். இதை இறைவன் மட்டும்தான் அறிவார். இம்முறை எனது நெருங்கிய நண்பன் மோசஸ் பற்றி இச்சஞ்சிகையில் உங்களோடு பகிர எண்ணியுள்ளேன்.

இவர் வயதில் முதிர்ந்தவர். ஆனால் உடல் வலிமை கொண்டவர். இவர் பாலைதீவிலே தனிமரமாக நின்று தன்னை உருக்குகின்றார் என்று எனக்குள் எண்ணிக்கொள்வேன். ஆனால் மறுகணம் என்மனம் சொல்லும், இல்லை இவருக்கு ஒரு குரு நண்பன் இருக்கின்றார். இவர்களிருவரும் இக் கடலை ஆளும் கடல் ஓநாய்கள் என்றும் எண்ணிக்கொள்வேன்.

75 ஆண்டுகளுக்கு முன்னர் கொளுத்தும் வெய்யிலும் மணற்பாங்குமான அல்லைப்பிட்டி என்னும் கிராமத்திலே மோசஸ் பிறந்தார். மோசஸ் திருமுழுக்குப்பெற வேண்டுமென்பதிலே இவரின் தந்தை அவசரம் காட்டினார். குழந்தை மோசேசை தோளோடு அணைத்து நிமிர்த்தும் நேரம் கனிந்து வர இவருடைய பெற்றோர் குழந்தையை எடுத்துக்கொண்டு ஊர்காவற்றுறை புனித

காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

அந்தோனியார் ஆலயத்திற்குப் புறப்பட்டனர்.

கடல் மார்க்கமாக ஊர்காவற்றுறை புனித அந்தோனியாரை நோக்கிய பயணம் ஆரம்பமானது. அன்று காற்று சற்று வேகமாக நின்றது. மோசஸ்சும் அவரது பெற்றோரும் இன்னும் சில யாத்திரிகர்களும் அப்படகில் பயணம் செய்தனர்.





# நுரைச்சோலை அனல்மின் நிலையத்துக்கு தேவையான நிலக்கரி கொண்டுவரப்பட்டது

## என்கிறது அரசாங்கம்

கொழும்பு, மார்ச் 13

நுரைச்சோலை அனல்மின் நிலையத்துக்கு அவசியமான நிலக் கரி உரியவாறு நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே இந்த விடயத்தைத் தெரி வித்துள்ளார்.

நுரைச்சோலை அனல்மின் உற் பத்தி நிலையம் ஊடாக தேசிய மின் சார கட்டமைப்புக்கு 900 மெகாவாட் மின்சாரம் கிடைக்கின்றது.

இந்தநிலையில், எதிர்வரும் ஏப் ரல் மாதம் நிறைவடையும் வரையில் அனல்மின் நிலையத்துக்கு அவசிய மான நிலக்கரி, மேலும் 5 கப்பல்க ளின் மூலம் கொண்டுவரப்படவுள்ள தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

### வடக்கு மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீனவர்களுக்கான நிவாரணப் பொதி களை வழங்கிவைக்கவுள்ளார்.

வடக்கு மீனவர்கள எதிர்நோக்கும் நெருக்கடி நிலைமையைக் கருத் தில்கொண்டு இந்திய அரசால் 5 ஆயிரத்து 800 ரூபா பெறுமதியி லான நிவாரணப் பொதிகள் இந்தியத் தூதுவரால் வழங்கி வைக்கப்பட வுள்ளன.

இந்தப்பொதிகளில் யாழ்ப்பாணம் மீனவர்களுக்கு 600 பொதிகளும், மன்னார் மீனவர்களுக்கு 200 பொதி களும் அனுமதிக்கப்பட்ட போதும் இந்தியத்தூதுவரின முன்னிலையில் இரு மாவட்டங்களிலும் தேர்வு செய் யப்பட்ட தலா 30 மீனவர்களே அழைக்கப்பட்டுள்ளனர்.

எஞ்சியவை தொடர்பான ஏற்பாடு களில் மன்னாரில் மேலும்70 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.




10/03/2022அன்று செல்வா பலஸ் மண்டபத்தில் யாழ் அருந்ததி நிறுவனம் நடாத்திய பிரமாண்டbridal show நிகழ்வில் யாழ் கலாலயா பயிற்சியகத்தின் 36 ஆண்டு கால சேவையை பாராட்டி இயக்குநர் மா. சுதர்சன் அவர்களுக்கு வடக்கு மாகாண ஆளுநர் திரு தியாகராஜா ஜீவன் அவர்கள் கேடயம் வழங்கி கௌரவித்தார்.

# அருந்ததியின் மாற்று மோதிரம் நிகழ்வும் மணப்பெண் அலங்காரக் கண்காட்சியும்













அருந்ததியின் மாற்று மோதிரம் நிகழ் வும், மணப்பெண் அலங்கார கண்காட்சியும் நான்காவது தடவையாக யாழ்ப்பாணம் செல்வா பலஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந் தும் மணப்பெண் அலங்கார நிபுணர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

திருமண மண்டபங்கள், திருமண ஆடை கள், மணப்பெண் அலங்காரம், மணப்பெண் அலங்காரப் பொருள்கள் மற்றும் புகைப்பட கலைஞர்கள் என பலருக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுக்கும் முகமாக இந்தக் கண்காட்சி ஒழுங்குபடுத்தப்பட்டது.

இதன்போது நிகழ்வின் பங்கேற்பாளர் கள், அனுசரணையாளர்கள் மற்றும் சாத னையாளர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

இந்த கண்காட்சியில் வடமாகாண ஆளு நர் ஜீவன் தியாகராஜா, வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெகத் பளிகக் கார, யாழ் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் பவானாந்தராஜா, க.கருணாகரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.03.2022இல் வெளியிடப்பெற்றது.





# உலகிலேயே விலையுயர்ந்த உணவு எது தெரியுமா?



உலகிலேயே விலையுயர்ந்த உணவை சாப்பிட வேண்டும் என்று நீங்கள் விரும்பி இருந்தால் அல்லது இனி விரும்புவீர்கள் என்றால் நீங்கள் சாப்பிட வேண்டியது மீன் முட்டையைத் தான்.

கேவியார் எனப்படும் ஸ்டேர்ஜன் இன மீன் வகைகளின் முட்டை தான் அது. உலகிலேயே விலையுயர்ந்தது ஒரு மீன் முட்டையா? எவ்வளவு இருக்கும் என்று நீங்கள் தேடிப் பார்த்தால் சில வேளை உங்கள் மூளை கொஞ்ச நேரம் நாக் – அவுட்டாகி விடும். ஒரு கிலோ கேவியார் முட்டைக்கு அதிகபட்சம் 35, 000 டொலர்கள். சுமாராக இலங்கை ரூபாக்களில் 70 லட்சம். அவ்வளவு விலையா என்று பார்த் தால், 70 லட்சம் இருந்தாலும் நீங்கள் நினைத்த மாத்திரத்தில் நம் மூரில் அது கிடைப்பதென்பது அரிது தான்.

ஏனென்றால் இந்த முட்டைகளை இடும் இனமான ஸ்டேர்ஜன் மீன்கள் தற்போது உலகில் அருகி வரும் இனமாக சிவப்புப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது.

இந்த கேவியார் மீன் முட்டைகளின் தாயகம் ஈரான், ரஷ்யா, கஜகஸ்தான், டர்க் மெனிஸ்தான் மற்றும் அஸர்பைஜானினால் சூழப்பட்ட கஸ்பியன் கடல் தான். 24 அடி நீளமும் 1, 500 கிலோகிராமும் வரை வளரும். இந் ரக மீன்கள் பெரும்பாலும் தற்போது பண்ணைகளில் வளர்க்கப்படுகிறன. உலகம் முழுவதிலும் சுமார் 2, 300 பண்ணைகளில் மட்டுமே வளர்க்கப்படும் இந்த ஸ்டெர்ஜன்கள் மீன்களில் பெலுகா வகை ஸ்டெர்ஜன் மீன்களுக்கு தான் மவுசு அதிகமாம். அதனாலேயே பெரும்பா லும் பண்ணைகளில் வைத்து பராமரிக்கப்படுவது இவைதான்.

இப்போ உங்களுக்கு ஒரு சந்தேகம் வரும், அதாவது இவ்வளவு பெறுமதியான மீன்களை அதிகமான பண்ணைகளில் வளர்த்து உழைக்கலாமே என்றால், அங்குதான் சிக்கல் இருக்கிறது.

இந்த ஸ்டேர்ஜன் மீன்களுக்கான உணவு, பண்ணை உருவாக்கம் மற்றும் பராமரிப்பு என்பனவற்றுக்கான முதலீடு ஒரு மாதத்திற்கு கோடிகளை தாண்டிவிடு மாம் ஆனால் இம்மீன்கள் 10 தொடக்கம் 15 வருடங்களில் தான் முட்டையே இட ஆரம்பிக்குமாம். இதனாலேயே பல முதலீட்டாளர்கள் இதனை நாடுவதில்லை. ஆனாலும் அதையும் தாண்டி ஒரு சிலரால் தான் இத்துறையில் சாதிக்க முடிகிறது.

இதனால் தான் கேவியார் மீன் முட்டைகளுக்கான கேள்வி அதிகமாக இருந்தும் உற்பத்தி குறைவாக இருப்பதால் இதன் விலை எகிறி இருக்கிறது. 19ஆம் நூற்றாண் டுகளில் சாதரண மீன் முட்டைகளைப் போலவே கருத்திற்கொள்ளப்பட்டு காலுக்கு கீழ் நசுங்கிக் கிடந்த கேவியார்கள் இப்போது மனித வேட்டையினால் அரிதான இனமாகி இப்போது ராஜ விருந்தாக மாறி இருக்கிறது.

கேவியார் மீன் முட்டைகளை எடுப்பதற்காக 15 வருடம் வளர்த்த மீன்களை கொல்ல வேண்டி இருந்தது எனினும் தற்போது அவை கொல்லப்படாமல் எடுக் கும் நவீன முறைகளும் புழக்கத்திற்கு வந்து விட்டன. இம்முட்டைகளை வெளி யில் எடுத்து உப்புப் போட்டு புரட்டி எடுத்து டப்பாவில் அடைத்தால்,உலகின் பெறுமதி யான உணவு தயாராகி விட்டது என்று நினைத்தால் இல்லை. இவற்றை சில உணவகங்களில் சிறப்பு மெனுக்களின் கீழ் சட்டியில் வறுத்து இன்னமும் அதன் விலையை கூட்டி விடுகிறார்கள். இதனை தங்களால் வாங்க முடியும் எனும் ப்ராண்ட் பிரியர்கள் அல்லது லக்ஸரி விரும்பிகள் வாங்கி சாப்பிடுகின்றனர்.

இவ்வளவு நேரமும் வாசித்துக் கொண்டிருக்கும் உங்களுக்குள் இந்த உணவு நளபாகத்தையும் மிஞ்சியதாய் இருக்கும் போல என்று ஒரு பொய்யான எண்ணம் உருவாகி இருக்கும், உண்மையில் அதன் சுவை வித்தியாசமாக இருந்தாலும் முதல் தடவையிலேயே லயித்து சாப்பிடும் சுவையை தராது. ஆனால், அதனை சாப்பிட்டு முடித்த பின் மீண்டும் சாப்பிட்டால் நன்றாக இருக்குமே என்ற எண்ணத்தை அந்த சுவை தூண்டுமாம். இது கேவியாரின் இன்னொரு ஸ்பெசல் என்கின்றனர் அதனை சுவைத்தவர்கள்.



## இராசரட்டையின் மீட்சி

பண்டுகாபயன் காலத்தில் உருவான இலங்கையின் ராசதானியான அனுராத புரத்தை மீளப்பெற்ற துட்டகைமுனு அதன் அபிவிருத்தியிலேயே அதிகம் பாடுபட்டார். போரால் தூர்ந்துபோன குளங்களும், கிராமங்களும் மீள மறு சீரமைக்கப்பட்டன. அதிகளவு பௌத் தர்கள் வாழ்ந்து வந்த இராசரட்டையில் புதிதாக மிரிசுவெட்டி தூபியை அமைத் ததும் துட்டகைமுனுவே.

மேலும் 9 அடுக்குகளை கொண்ட லோகமகாபாய உபதேச மண்டபம் அமைக்கப்பட்டு மாகவிகாரைக்கு தான மாக அளிக்கப்பட்டதும் இம்மன்னனா லேயே. கொத்மலை, திகாமடுல்ல ஆகிய பகுதிகளில் விவசாயதுக்கு என பல முன்னேற்ற திட்டங்களை உருவாக்கி யதன் மூலம் நாட்டை பொருளாதார தன்னிறைவு பாதைக்கு இட்டுச்சென் றது இவரே. மகியங்கனையில் இருக்கும் சொரபொர வாவியும் துட்டகைமுனு வின் படைப்பே.

இலங்கையில் இன்று நிமிர்ந்து நிற்கும் ருவவன்வெலிசாய தாதுகோபம் கெமுனு வின் சிந்தனையிலேயே உதித்தது. அதன் கட்டுமானம் கெமுனு மன்னனாலேயே ஆரம்பிக்கப்பட்டது. ஆனாலும் அதன் நிறைவுற்ற அமைப்பை காணும் சந் தர்ப்பத்தை அவரால் பெற முடியாது போனது. 24 வருடங்கள் (கி.பி.161 - கி.பி.137) அனுராதபுரத்தில் இருந்து ஆட்சிபுரிந்த துட்டகைமுனுவுக்கு பின் னர் அவரது தம்பியான சத்தாதீசன் ஆட்சியை ஏற்றார்.

# கல்விக்கதிர்



- அகரன் -

## கும்பகர்ணன்

**கும்பகர்ணன் இமையத்தின் பனிக்கல்லில் இசியும் கங்கை சேற்றில் பிறந்த செந்தாமரை**
**தூங்கிக் கிடந்த ஓங்கல் மலை**
**உயரமானவன், அதே சமயம் பணிவானன்**
**கம்பன் இரசித்து இரசித்து உருவாக்கிய காதாபாத்திரங்க ளில் கும்பனும் ஒருவன்.**
**அவன் மட்டும் தூங்காமல் இருந்திருந்தால் இராவணன் தவறு செய்யும் போதே தடுத்திருப்பான்.**
**தவம் மிகுந்தவன். ஆனால் ஏமாற்றப்பட்டவன்**
**சாவா வரம் கேட்க நினைத்து ஓயாத் தூக்கம் வரமாகப் பெற்றவன்**
**அரக்க குணமுடையவன் தான். அதேசமயம் அதர்ம வழி செல்ல நினையாதவன்**
**அவன் நின்றால் இமயமலை, கிடந்தால் விந்திய மலை.**



வால்மீகி காட்டுகின்ற கும்பகர்ணனை மட்டும் படித்து விட்டுக் கம்பன் காட்டும் கும்பனைப் படிக்காதிருந்தால் அற்புதமான ஒரு படைப்பை நாம் தவற விட்டிருப்போம்

வால்மீகி கண்டதைச் சொன்னார். கம்பன் கவிக்கொண் டலாய்ச் சொன்னான். துளசி தொண்டனாய்ச் சொன்னார். கம்பன் கவிக்கொண்டலாக, நாடகப் புலவனாகக் கும்பகர் ணனை எப்படிப்படைத்திருக்கிறார் என்பதைப்பார்க்கலாம்

தர்ம சங்கடமான ஒரு நிலையில் கதாபாத்திரங்கள் எப்படி நடந்துகொள்கின்ற என்பதை வைத்துத்தான் அக்கதாபாத்திரங்களின் உண்மையான தன்மையை நாம் அறிய முடியும். கும்பகர்ணனுக்கும் அவனது தம்பி விபீணனுக்கும் ஒரே மாதிரியான தர்மசங்கடமான நிகழ்ச் சிகள் நடைபெறுகின்றன. இரண்டுபேரும் வெவ்வேறு வகையாக அதைக் கையாள்கிறார்கள். என்றாலும் இரு வரும் வெவ்வேறு வகையிலே உயர்ந்துநிற்கிறார்கள். கும்பகர்ணன் தவத்தில் மிக்கவன். அவன் கேட்க நினைக் கும் சாகா வரத்தை அவன் பெற்றுவிட்டால் தேவர்கள் கதி அதோகதிதான் என்று நினைத்த இந்திரன் சரஸ்வதியை வேண்ட கும்பகர்ணன் பிரம்மாவிடம் வரம் வேண்டும் போது அவனது நாக்கைச் சற்றுப் பிறழ வைத்துவிடுகி றாள். நித்தியத்துவம் என்று கேட்க நினைத்தவன் நித்தி ரைத்துவம் என்று கேட்டு விடுகிறான். அதனால் சதா தூங் கிக்கொண்டிருக்கும் வரத்தைப் பெற்று விடுகிறான். இராவ ணனும் அவனது சகோதரர்களும் பிரம்ம குலத்தைச் சேர்ந்தவர்கள். பிரம்மதேவன் மானச புத்திரர்களில் புலத்தி யன் என்பவனும் ஒருவன். அந்தணன். அவன் ஒரு அரக்கியை மணக்க நேர்ந்ததால் அவனது வமிசத்தினர் அரக்கர்களாக ஆகிவிடுகிறார்கள். புலத்தியன் இராவண னுக்குத் தாத்தா. எனவே பிரம்மாவுக்கு இராவணனிடமும் அவனது சகோதரர்களிடம் ஒரு பாசப்பிணைப்பு உண்டு. எனவே இராவணன் பிரம்மாவிடம் வேண்ட பிரம்மா கும் பகர்ணனின் தூக்க வரத்தைச் சற்றே மாற்றி ஆறுமாதங் கள் தூங்கவும் ஆறுமாதங்கள் விழித்திருக்கவுமாகச் செய்துவிடுகிறார்.

இன்னொரு வகையாகவும் அவன் தூக்க வரம் பெற் றதைப்பற்றி ஒரு கதையிருக்கிறது. கும்பகர்ணன் கடுமை யான பசிய உடையவன். கையில் கிடைத்த ஜீவ ராசி களையெல்லாம் அப்படி அப்படியே உண்டு வந்தானாம். எல்லோரும் பிரம்மாவிடம் முறையிட அவனுக்குத் தூக்கச் சாபம் கொடுத்துவிடுகிறார். இராவணன் வேண்ட அவன் எழுப்பப்பட்டால் ஒருநாள் மட்டும் விழித்திருப்பான். அப்பொழுது அவன் எதை வேண்டுமானாலும் சாப்பிட் டுக்கொள்ளட்டும் என்று பிரம்மா வரத்தை மாற்றினார் என்றும் சொல்லப்படுகிறது.

# மலையகப் பெண்களும் மகளிர் தினமும்



இரா. சிவலிங்கம்

மலையகத்தின் வரலாறு 200 வருடங்களை கடந்து விட்ட நிலையில் மலையகப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்வியல் அம்சங்கள் இன்று பல்வேறு சமூகப் பொருளாதார மாற்றங்களை காணவேண்டிய நிலையில் உள்ளது. இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருக்கின்ற இம்மக்களின் வாழ்க்கை சகடோட்டத்தில் போராட்டங்கள், பிரச்சினைகள், ஏமாற்றங்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

உலகத்தில் வாழ்க்கையை எப்படி வேண்டுமானாலும் வாழ முடியும். ஆனால் இப்படித்தான் வழ வேண்டுமா? என்ற கேள்வி மலையக மக்களின் வாழ்க்கையில் தொடர்கின்றது என்பதை மறுப்பதற்கு இல்லை.

குறிப்பாக மலையகத்தின் பெருந்தோட்டத்தில் வேலை செய்கின்ற பெண்களை மகளிர் தினங்களில் மட்டும் போற்றுவதும், கௌரவிப்பதும், பரிசில்கள் வழங்குவதும் காலம் காலமாக செய்யப்படுகின்ற ஒரு விடயமாக உள்ளது.

ஆனால் நான்கு பரம்பரைக்கு மேலாக உழைக்கின்ற இப் பெண்களின் வாழ்வில் ஒரு நிம்மதி பெருமூச்சு எப்போது கிடைக்கும் என தினமும் வஞ்சகமின்றி, தொழில் பக்தியோடு, கடினமாக உழைக்கும் இப் பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு இந்த தேசம் என்ன செய்தது. என்ற வினாவை கேட்கத் தோன்றுகின்றது.

பெருந்தோட்டத்தில் 8 மணித்தியாலம் வேலை செய்ய வேண்டும். ஒரு நாளைக்கு 20 கிலோ கொழுந்து பறிக்க வேண்டும். தோட்ட நிருவாகத்தின் நிபந்தனைகளின் கீழ் வேலை செய்ய வேண்டும். இன்றும் அதே கங்காணி முறை, அதே வேலைக்கான உடை தொழிலில் மாற்றம் இல்லை. உலகத்திலேயே பயிற்சி பெறாமல் தொழில் கிடைக்கும் ஒரே தொழில் தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து பறிக்கும் (பறித்தல்) தொழில் என்பது உலகத்திற்குத் தெரியுமா?

இவர்களுடைய தொழிலுக்கும், வேதனத்திற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. இன்றும் நாள் கூலிதான். இன்றைய வாழ்க்கை செலவை சமாளிக்க கூடிய வகையில் இவர்களுக்கு சம்பளம் கிடைக் கின்றதா? என்பதை யாரிடம் முறையிடுவது. ஏன்? இந்த நிலைமை. இந்நிலைமை தொடர்வதற்கு காரணங்கள் யாது? உழைக்கும் இப் பெண்களா? தோட்ட நிருவாகமா, சமூகப் பிரதிநிதிகளா, அரசா? யாரை குறை கூறுவது.

உலகத்தில் பல கோடி பெண்கள் வாழ்கின்ற இக்காலக்கட்டத்தில் ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்கும், தேசிய உற்பத்திற்கும் பங்களிப்புச் செய்கின்றவர்களில் மத்திய கிழக்கு நாடுகளில் (வெளிநாட்டில்) வீட்டுப் பணிப் பெண்களாக பணியாற்றும் பெண்களும், பெருந்தோட்டத் தொழிலாளர் பெண்களினதும், ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர் பெண்களினதும் சேவை அளப்பரியது.

பெண்ணியம் பேசுகின்றவர்களுக்கு மட்டும் மேற்கூறிய விடயங்கள் தேவைப்படுகின்றன. ஆனால் இவர்களுக்கான உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் போதாது என்பது கவனிக்கத்தக்கது.

பெருந்தோட்டத்தில் எத்தனையோ பெண்கள் தங்களுடைய கல்வியை பல்வேறு காரணங்களால் இடைநடுவில் நிறுத்தி விட்டு, கொழுந்து பறிக்கச் சென்றிருக்கின்றார்கள். இவர்களுடைய பிள்ளைகளையாவது படிக்க வைத்து ஒரு தொழிலுக்கு அனுப்ப முயற்சி செய்தாலும் கூட, இவர்களுடைய குடும்பச் சூழல், வாழும் சூழல், வீட்டுச் சூழல், பொருளாதார சுமை போன்றன தடைகளாக இருக்கின்றன.

நாகரிக மாற்றத்திற்கும், உலக மாற்றத்திற்கும் ஏற்ப இப் பெண்களும் மாற வேண்டும். ஒரு சமூகத்தின் கண்களே பெண்கள்தான். பெருந்தோட்ட பெண்களினது தொடர்ச்சியான உழைப்பானது, அவர்களை உடல், உள ரிதியாக பாதித்துள்ளது. என்பதை வெளியுலகிற்கு எடுத்துச் செல்ல வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்.

பெருந்தோட்டப் பிரதேசத்தில் இன்று அநேகமானப் பெண்கள் முன்பள்ளி ஆசிரியர்களாகவும், ஆசிரியர்களாகவம், தாதிகளாகவும், தனியார் நிறுவனங்களிலும், தொழிற்சாலைகளிலும், ஆடைத் தொழிற்சாலைகளிலும், சுய தொழில்களிலும், அரச உயர் பதவிகளிலும், வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் வீட்டுப் பணிப் பெண்களாக வேலை செய்வது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் பெருந்தோட்டத்தில் வேலை செய்கின்ற பெண்களுக்கு, சலுகைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது ஒட்டுமொத்த சமூகத்திலுள்ளவர்களின் பொறுப்பாகும். இதனை காலம் தாழ்த்தாது செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகும்.

குறிப்பாக இப் பெண்களுக்கான ஓய்வு நேரம் அதிகரிக்கப்பட வேண்டும். தகாத காலநிலைகளுக்கான உடைகள் வழங்க வேண்டும். பனி, குளிர், வறட்சி, மழை, வேலைத்தளங்களில் ஆபத்துக்கள் ஏற்படாமல் முன் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.



தோட்டங்கள் தோறும் பெண்கள் கழகங்கள், பெண்கள் கல்வி அபிவிருத்திக் குழு, பெண்களுக்கான வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவு, பெண்களுக்கான கடன் வசதி, பொழுது போக்கு வசதிகள், பெண்களுக்கான விஷேட காப்புறுதி, சுய தொழில் வாய்ப்புக்கள், தூர மலைகளுக்கு வேலைக்குச் செல்கின்றவர்களுக்கு போக்குவரத்து வசதி செய்ய வேண்டும். மருத்துவ வசதி, வீட்டு வசதி, சுத்தமான குடி நீர், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான இலகு வேலைகள், அரசம், தோட்ட நிருவாகமும் செய்து கொடுக்க வேண்டும்.

நாள்சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். தொழில் கல்வி, தொழில் பயிற்சிகள் சுற்றுலாக் கல், ஊக்குவிப்புக்கள், மலைகளில் உணவருந்துவதற்கான வசதிகள், மனிதாபிமான நிருவாகச் செயற்பாடுகள், பிள்ளை பராமரிப்பு, தாய் சேய் பராமரிப்பு, கர்ப்பிணித் தாய்மார்கள் பராமரிப்பு போன்றவற்றை தோட்ட நிருவாகம் மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அத்துடன் இவர்களுக்கான நலப் பணிகள் சமூக நலப் பணிகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

பெருந்தோட்டப் பெண்களும் இந்நாட்டில் பிரஜைகள். அவர்களும் தேசிய உற்பத்திக்கு பங்களிப்புச் செய்து பெருந்தோட்டத் துறையை உயிர்ப்பித்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை கருத்தில் கொண்டு, நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய பொறுப்பாகும். தோட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையில் அதிகமானோர் பெண்களாவார்கள். இவர்களுடைய வாக்குகளின் எண்ணிக்கையும் மிக அதிகமாகும். இவர்கள் வாக்களிப்பதில் ஆண்களின் பங்களிப்பே அதிகமாகும். தேர்தல் காலங்களில் பல வாக்குறுதிகளை வழங்கினாலும் இவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளும் உரிமைகளும் மிக மிகக் குறைவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக ஒரு தேர்தலில் பெண்கள் வாக்களிக்கா விட்டால் தான் இவர்களுடைய பலம் உலகிற்கு தெரிய வரும்.

பெண்களின் போராட்டங்களில் ஆண்களின் பங்களிப்பு மிகவும் குறைவு, குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு போராட்டங்களின் போது நியாயமான சம்பளத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும் என எத்தனை பொது அமைப்புக்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும், அரச நிறுவனங்களும், மத ஸ்தாபனங்களும், பல்கலைக்கழகங்களும், கல்வியற் கல்லூரிகளும், பாடசாலைகளும் மன்றங்கள், கழகங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் இம்மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு அளிக்க முன்வந்த என ஆராய்ந்து பார்த்தால் அனைவருமே வெட்கி தலை குனிய வேண்டிய நிலையில் உள்ளோம். (இந்தியாவில் ஜல்லிக்கட்டுக்கு கொடுத்த ஆதரவை உலகம் அறியும்).

குறிப்பாக மலையகப் பிரதேசமான நுவரெலியா மாவட்டத்தில் மந்த போசணை வீதம் மிக அதிகமாக காணப்படுகின்றது. மது பாவனையில் இலங்கையில் இரண்டாம் இடத்தில் இருக்கின்றது. தாய் சேய் இறப்பு, சிசு மரணம், எடை குறைந்த பிறப்பு போன்றன குறிப்பிடத்தக்களவு உயர்வாக உள்ளமையை பல ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. அத்துடன் கல்வி அடைவு மட்டங்களும் அரச தொழில் வாய்ப்புக்களும் பின்னடைந்த நிலையிலேயே இருக்கின்றன என சுட்டிக்காட்டப்படுகின்றது. மேற்கூறிய வற்றுக்கெல்லாம் காரணம் இப்பிரதேசத்தில் தோட்டத் தொழிலாளர்கள் அதிகமாக வாழ்கின்றமையை குறிப்பிடலாம்.

தோட்டத்திலேயே பிறந்து, தோட்டத்திலேயே வேலை செய்து, தோட்டத்திலேயே இறக்கின்ற இப் பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு அரசு தொடக்கம் சர்வதேசம் வரை முன்வர வேண்டும். இம்மக்களை இந்நாட்டிற்கு பெருந்தோட்டத் தொழிலுக்காக அழைத்து வந்தவர்களும் (ஆங்கிலேயர்களும்) தென் இந்திய அரசும் உதவ வேண்டும். பெருந்தோட்டப் பெண்களின் ஆரோக்கியமானதும், சந்தோசமானதுமான நிலையுமே இந்நாட்டின் சுபீட்சமான எதிர்காலமாகும் என்பதில் ஐயமில்லை.

# வாழ்க்கையில் உச்சபட்ச மகிழ்ச்சி



ப்ரியமதா பயஸ்

உலகெங்கிலும் இருக்கும் தனி மனிதர்களிடம் நிலவும் ஒரு பரவலான கருத்து உச்சபட்ச மகிழ்ச்சி என்பது உண்மையாகவே தனக்கு ஏற்ற மனைவியை கண்டுபிடிப்பது, என்பது தான்.

தனிமையில் வாழ்பவர், தனிமையில் வாழும்பொழுது தான், என் முழு சுதந்திரத்தை உணர்கிறேன் என்று கூறுவதுமுண்டு.

திருமணமாகாத 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இரு பாலாருக்கும் திருமணம் பற்றிய கனவுகள் அவ்வப்போது வந்து போகும். அதிலும் ஒரு சில ஆணும், பெண்ணும் தனக்கு திருமணத்தில் நாட்டம் இல்லாதது போன்றதொரு வெளிப்பாடு பலரை ஆச்சரியப்படுத்தும்.

உளவியல் ரீதியாக நடத்தப்பட்ட ஆய்வுகள் கூறும் கூற்றுகள் நம்மை ஆழ்ந்து சிந்திக்க வைக்கும்.



திருமணமாகாத அமெரிக்க இளைஞர்கள் 814 நபர்களைக் கொண்டு, உளவியல் ஆய்வாளர் செய்த ஆய்வில், திருமணமாகாத பெண்கள் மிகவும் சுதந்திரமாக வாழ்கின்றனர் எனவும் உணர்வதாகவும், திருமணமாகாதவருக்கு தனது குடும்பத்தினர் மீது எப்போதும் அக்கறையும், பிணைப்பும் இருப்பதாகவும், திருமணமான ஆணும் பெண்ணும் தன் சுதந்திரத்தை இழந்து, தனிமையில் வாடுகின்றனர் எனவும் கூறுகின்றது.

இது அமெரிக்க இளைஞர்கள் தானே, இங்கே நிலைமை வேறு என்று நாம் எடுத்துக்கொள்ளலாகாது. ஏனெனில்நம் நாட்டிலும் பலர் வெளிநாடுகளின் வாழ்க்கை முறையோடு ஒட்டிய வாழ்க்கைமுறையை தான் பின்பற்றுகின்றனர்.

# வாழ்க்கையில் நாம் கட்டாயம் தவிர்க்க வேண்டிய விடயங்கள்

ஒரு ஆணாக பெண்கள் மீது தவறாகக் கொண்டிருக்கும் புரிதலும், ஒரு பெண்ணாக ஆண்கள் மீது தவறாகக் கொண்டிருக்கும் புரிதலும் கட்டாயம் நம் வாழ்வில் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று.

ஏனென்றால் பல இடங்களில் ஆணும் பெண்ணும் தெரிந்தோ தெரியாமலோ ஒருவரை ஒருவர் சார்ந்து இருக்கும் நிலையில் தான் உள்ளோம். என்னதான் தனித்தனியாக இருவரால் இருக்க முடியும் என்று வீராப்பாக பேசினாலும், வெளி உலகம் என்று வரும் பட்சத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் தத்தம் எதிர்ப்பாலினத்தவரின் உதவி இல்லாமல் இயங்குவது கடினம். பெண்கள் என்றாலே பணத்தின் பின்னால் செல்வார்கள் என்ற நிலைபாடு சமூகத்தில் பரவ லாக இருக்கிறது. ஆனால் பணத்தைத் தாண்டி பெண்களை உண்மையில் ஈர்க்கக் கூடியது வேறு.

உதாரணத்திற்கு ஒரே ஆண்மகனை நான்கு விதமாக எடுத்துக் கொள்வோம்.

ஏழையாக இருக்கும் சோம்பேறி.

பணக்காரனாக இருக்கும் சோம்பேறி.

பணக்காரனாக இருக்கும் புத்திசாலி.

ஏழையாக இருக்கும் புத்திசாலி.

இந்த நால்வரில் பெண்கள் யாரைத் தேர்வு செய்வார்கள்? நீங்கள் நினைக்கலாம் பெண்கள் பணம் அதிகம் படைத்தவர்களைத் தான் தேர்வு செய்வார்கள் என்று. ஆனால் பணத்தைத் தாண்டி, ஒரு பெண்ணின் மனது தன்னுடைய துணை திறமைசாலியாக இருக்கவேண்டும் என்பதையே எதிர்பார்க்கும். அதாவது 3 மற்றும் 4ஆவது நபர்களையே பெண்கள் பெரும்பாலும் தேர்வு செய்வார்கள்.

முதலில் இருக்கும் ஏழை சோம்பேறியை கட்டாயம் யாரும் தேர்வு செய்ய மாட்டார்கள்.

இரண்டாவது இருப்பவன் என்னதான் பணக்காரனாக இருந்தாலும், சோம்பேறியாக இருப்பதனால், இருக்கும்பணத்தை இழந்தாலும் அவனால் எதுவும் செய்ய முடியாது.

பணக்கார புத்திசாலியை எந்த யோசனையும் இன்றி பெண்கள் தேர்வு செய்வார்கள். ஏழை புத்திசாலியை பெண்கள் தேர்வு செய்ய காரணம், அவனிடம் தற்போது பணம் இல்லை என்றாலும் அதை ஈட்டுவதற்கான திறமை இருப்பதால், எந்த காலத்திலும் அவனால் ஒரு நிலையை அடைய முடியும் என்ற நம்பிக்கை பெண்களுக்கு ஏற்படும். எனவே இவ்விடத்தில் பணத்தைத் தாண்டி, ஒரு ஆண்மகன் எந்த அளவுக்கு திறமை, தைரியம் தன்னம்பிக்கை கொண்டிருக்கிறான் என்பதை பொறுத்தே பெண்கள் ஒருவனை தேர்வு செய்வார்கள்.



என்னதான் பொதுவெளியில் பேசும் பொழுதோ கருத்துக்கள் கூறும் பொழுதோ, நாம் இதுபோன்று ஒருவரை ஒருவர் தவறாகப் பேசிக் கொண்டாலும் தத்தம் மனதளவில், அனைத்து இடங்களிலும் ஏற்ற இறக்கங்கள் இருக்கத்தான் செய்கிறது. ஏதோ ஒரு வகையில் ஒருவரை ஒருவர் சார்ந்து இருக்கிறோம். இது சகஜமான ஒன்று என்பதை ஏற்றுக்கொண்டால், அனைவரிடமும் சகஜமாகப் பழக பேருதவியாய் இருக்கும்.



# அலுவலகத்திலும் வீட்டிலும் பெண்

அன்று ஆண் வேட்டைக்குச் செல்ல பெண் அதனைச்சமைத்துக்கொடுத்தாள், என்றாலும் இன்று பெண் வேட்டைக்கும் சென்று அதனைச் சமைத்தும் கொடுக்கின்றாள் எனக் கூறுவதுண்டு. தற்காலத்தில் பெண் வீட்டுப் பணிகளைப் போன்றே அலுவலகப் பணிகளையும் அதிகமாகச் செய்துவருகின்ற காரணத்தினாலேயே இவ்வாறு கூறப்படுகின்றது.

இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான பெண்களும் வேலைக்குச் செல்கின்ற காரணத்தினால் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரையிலான எட்டு மணிநேரம் தொடர்ந்து வேலை செய்ய வேண்டிய நிலை உருவாகின்றது. அரசாங்கத் தொழிலாக இருந்தாலும், தனியார்த் துறையில் பணிபுரிந்தாலும் செய்யவேண்டிய பணிகளுக்கு மட்டும் குறைவிருக்காது.

தனது பணியை சரியாகச் செய்வது, கொடுக்கப்படும் பணிகளை குறைகளின்றி பூர்த்தி செய்வது, போட்டிமிக்க சூழலை வெற்றிகரமானதாக சமாளிப்பது போன்றன நினைக்கும் அளவு சுலபமான செயல்கள் அல்ல. என்றாலும் இன்றைய காலகட்டத்தில் அதிகமான பெண்கள் இந்த செயற்பாடுகள் அனைத்தையும் பூர்த்தி செய்து தொழில் முறையில் உயர்வடைவது மாத்திரமில்லாமல், வீட்டுப் பணிகளையும் நிறைவாகச் செய்துவருகின்றனர்.

பெண்கள் வீட்டுப் பணிகளுக்கு, அலுவலக வேலைகளுக்கு மத்தியில் இரண்டாமிடம் கொடுப்பதில்லை. சமையல், வீட்டை சுத்தமாகவும், அழகாகவும் வைத்துக் கொள்ளல், பிள்ளைகள் இருப்பார்கள் எனின் அவர்களின் வேலைகள், பெற்றோர் மற்றும் உறவினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் போன்ற அனைத்தையும் பெண்கள் அலுவலகப் பணிகளுடன் சமமாகச் செய்து வருகின்றனர்.

அலுவலக வேலைக்குச் செல்லாமல் வீட்டிலேயே இருந்து சுயதொழில் செய்து தனது வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்திச் செல்லும் பெண்களும் இக்காலத்தில் இருக்கின்றார்கள். ஆடை வியாபாரம், சட்டதுறைசார்ந்த நிறுவனத்தை செயற்படுத்திச் செல்வது போன்ற பல்வேறு வேலைகளுக்கு மத்தியில் இதனை வாசிப்பவர்களும் உங்கள் மத்தியில் இருக்கின்றார்கள். இதனிடையே நீங்கள் முகம் கொடுக்கும் இடையூறுகள், சிரமங்கள் மற்றும் போட்டித் தன்மைகள் பற்றி புதிதாக நினைவூட்ட வேண்டியது எதுவும் இல்லை.



# நான் என்னையறிந்த போது

சிறுகதை

கொட்டகல இரா.சிவலிங்கம்

நிலா ஒளியின் வெளிச்சத்தில் குமாரியின் குடும்பத்தினர் மிகவும் சந்தோசமாக உரையாடிக் கொண்டிருந்தார்கள். பௌர்ணமி முடிந்து இரண்டு தினங்களாகியும் நிலவின் வெளிச்சம் இன்னும் இருந்தது.

குமாரி க.பொ.த. சாதாரணத் தரப் பரீட்சையில் மிகவும் திறமையாகச் சித்திப் பெற்றிருந்தாள். மறு நாள் காலை க.பொ.த உயர்தரப் பிரிவில் விஞ்ஞானத் துறையில் படிப்பதற்காக ஹட்டன் பிரதேசத்தில் இருக்கும் பிரபல பாடசாலைக்குச் செல்லவிருக்கின்றாள். என்பதாலும், பரீட்சையில் எட்டு ஏ. ஒரு பி (8AB) எடுத்து மிகவும் திறமையாகப் பாஸ் பண்ணியிருந்தமையையும் பற்றியுமே இந்த உரையாடல்கள் தொடர்ந்து கொண்டிருந்தன.

பாடசாலையில் நடந்த பாராட்டு விழாவில் பலரும் பலவாறு புகழ்ந்து பேசினார்கள். இந்த நாளை குமாரிக்கு மறக்க முடியாது. இவள் பேசும் போது நான் ஒரு டாக்டராக வருவேன். இதுதான் எனது இலட்சியம். என் பெற்றோர்களின் கனவை நனவாக்குவேன். செல்லும் பாடசாலையில் எனது பாடசாலையின் புகழைக் காப்பாற்றுவேன். இலங்கையிலேயே முதல் மாணவியாக பல்கலைக்கழகத்திற்கு தெரிவாவேன். என பேசியபோது, மண்டபமே கைதட்டல்களால் அதிர்ந்தது.

மறுநாள் காலை ஹட்டன் பஸ்ஸில் ஏறி தகப்பன் சுந்தரத்தோடு அட்டனை நோக்கிப் புறப்பட்டார்கள். குமாரிக்கு இப்பிரதேசம் புதுசு. ஆங்காங்கே மலைச் சரிவுகள், இயற்கையான நீர் வீழ்ச்சிகள், போர்வைப் போர்த்தியது போல் இருக்கும் மரங்கள். எங்கு பார்த்தாலும் பச்சை நிறம், வளைந்து நெளிந்து போகும் பாதை, மெல்லிய குளிர் காற்று இதையெல்லாம் பார்க்கும் போது குமாரிக்கு மிகவும் பிடித்து இருந்தது.

புதிய பாடசாலை குமாரிக்கு மிகவும் பிடித்திருந்தது. அப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் அனைவரும் இவளுடைய பெறுபேற்றைக் கேட்டு விட்டு பாராட்டினார்கள். இவற்றையெல்லாம் கேட்ட போது, நன்றாக படிக்க வேண்டும் என மனதில் நினைத்துக் கொண்டாள்.

பாடசாலையை விட்டுச் செல்ல முற்பட்ட தந்தையை கட்டிப் பிடித்து அழத் தொடங்கினாள். தந்தையின் பாசம் அவளை வாட்டியது. அந்த பாடசாலையே ஒரு கணம் சோகத்தில் மூழ்கியது. தந்தையின் கண்களும் கலங்கி விட்டன. இல்லம்மா... நீ, நல்லா படிச்சி பாஸ் பண்ணனும். நா ஒன்ன அடிக்கடி வந்து பார்க்கிறேன் என சொல்லிவிட்டு மகளைப் பிரிய மனமில்லாமல் பாடசாலை முடியும் வரை காத்திருந்து மகளை போடிங் வீட்டுக்கு அழைத் துச் சென்றார்.

காலங்கள் ஓடுகின்றன. குமாரி உயர்தரத்தில் முதலாவது வருடத்தைப் பூர்த்தி செய்கின்றாள். பாடசாலையில் நடைபெறுகின்ற விளையாட்டுப் போட்டி, இலக்கிய மன்றங்கள், தமிழ் மொழித் தினம், எல்லா விடயங்களிலும் நல்ல பெயர் எடுக்கின்றாள். பாடசாலையில் மாணவத் தலைவி, உயர்தரப் பிரிவில் சிறந்த மாணவி என பல பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெறுகின்றாள்.

தினமும் பாடசாலைக்கும் மேலதிக வகுப்புக்களுக்கும் செல்கின்றாள். நன்றாகப் படிக்கின்றாள் என ஆசிரியர்களும், பெற்றோரும் நம்பினர். எப்படியாவது இம் முறை குமாரி நல்ல ரிசல்ட் எடுத்து பாஸ் பண்ணுவாள் என அனைவரும் நம்பினார்கள். இம்முறை மருத்துவத் துறைக்கு செல்வாள் என அனைவரும் பேசிக் கொண்டனர். சுந்தரமும் தன் மகள் டாக்டராக வருவாள் நல்லா படிக்கின்றாள் என தோட்டத்தில் உள்ள சக தொழிலாளர்களிடமும் தினமும் சொல்லிப் பெருமைப் பட்டுக் கொள்வான்.

குமாரியோ தன் தோழி சுந்தரியின் சகோதரனோடு எப்படியோ காதல் வயப்பட்டு விட்டாள். தினமும் செல் போனில் பேசுவதும், குறுந்தகவல் அனுப்புவதும், வெளியில் போய் வருவதும், பஸ்ஸில் செல்வதும் என சுதந்திர பறவைகளாய் சுற்றித் திரிந்தாள். தன் காதலனோடு யாருக்கும் தெரியாமல் பழகிக் கொண்டிருந்தாள், தாய் தந்தை பாசம், தனக்கு மாதம் எட்டாயிரத்திற்கு மேல் செலவு செய்யும் பெற்றோர், சகோதரர், உற்றார், உறவினர்கள் எல்லாம் இப்போது மறந்து விட்டு காதலில் மூழ்கி விட்டாள். தன் பெற்றோரைப் பார்க்க வீட்டுக்குச் செல்வதும் குறைந்து விட்டது.

சிறிது சிறிதாக படிக்கின்ற ஆர்வமும், தன்மையும், நடையுடை பாவனையும் மாறிவிட்டது. விடயத்தை கேள்விப்பட்டவர்கள், எவ்வளவு புத்தி சொல்லியும் அவள் மசிய வில்லை. காதலன் குமாரை மறக்க முடியாமல் தவித்தாள். குமார் பாடசாலை கல்வியை இடையில் விட்டு விட்டு கொழும்புக்கு வேலைக்குச் சென்று விட்டான். இவனுடைய சம்பளத்தை நம்பி ஒரு குடும்பமே இருக்கின்றது. என்ன செய்வது காதல் கண்ணை மறைக்கும் என்பது இவர்களுக்கு மட்டும் புரியுமா?

குமாரிக்கு உயர்தரப் பரீட்சை நெருங்கியது. காதலனை பிரிந்து விடுவோமோ என்பதை நினைக்கும் போது வேதனையாக இருந்தது. இதனால் இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொண்டார்கள். பரீட்சையும் எழுதுகின்றாள்.

நடந்து முடிந்த உயர்தரப் பரீட்சையை சிறப்பாக எழுதினேன் எனவும், தனக்கு கட்டாயம் நல்ல ரிசல்ட் வரும் என்றும் யுனிவர்சிட்டி கிடைக்கும் என்றும், சொல்லித் திரிந்தாள். நான் டாக்டராக வருவேன் என உறுதியாக நம்பினாள்.

உயர் தரப் பரீட்சைப் பெறுபேறு இணையதளத்தில் வெளிடப்பட்டது. குமாரி மிகவும் ஆவலோடு தன்னுடைய சுட்டெண்ணைக் கொடுத்து பெறுபேற்றைப் பார்த்தாள். அந்த பெறுபேற்றை அவளால் நம்ப முடியவில்லை. மீண்டும் மீண்டும் பார்க்கச் சொன்னாள். தன்னுடைய சுட்டெண்ணை பல முறை சரிபார்த்தாள். அவளுடைய பெறுபேறானது அனைத்துப் பாடங்களிலும் என காணப்பட்டது.

குமாரியால் நம்ப முடியவில்லை. தன் இதயமே வெடித்து விடுவதுபோல் இருந்தது. தலைச் சுற்றியது. தன்னுடைய தாய் தந்தையின் கனவுகளெல்லாம் உடைந்து சுக்கு நூறாய் போனதை உணர்ந்தாள். இரண்டு வருட காலமும் செலவு செய்த பணம், நேரம், காலம், அலைச்சல், நம்பிக்கை எல்லாம் ஒரு நொடியில் பொழுதில் வீணாகி விட்டதை உணர்ந்தாள்.

தாய் தந்தையிடத்தில் எப்படி போய் இந்த ரிசல்டைச் சொல்லுவேன். இவர்கள் முகத்தில் எப்படி முழிப்பேன்? என மனதுக்குள் அழுகின்றாள். என் மேல் நம்பிக்கை வைத்திருந்த பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாடசாலை, நண்பர்கள், சமூகம் இவர்களெல்லாம் கண்முன்னே நிற்கின்றார்கள். குமாரிக்கு அவமானம் தாங்க முடியவில்லை. தன்மேலேயே ஒரு வெறுப்பு ஏற்படுகின்றது. வாழ்க்கையில் ஏதோ பெரிய தவறு செய்துவிட்டமையைப் போல் உணர்கின்றாள்.


படிக்கப் போன இடத்தில் காதல் வசப்பட்டு இப்படி வாழ்க்கையை தொலைத்து விட்டமையை நினைக்கும் போது, இறந்து விட வேண்டும் என, குமாரி நினைத்துக் கொண்டு மிக வேகமாக வீட்டை நோக்கி நடக்கின்றாள்.

இதே சிந்தனையோடு வீட்டுக்குச் செல்லும் குமாரிக்கு வீட்டில் பேரதிர்ச்சி காத்திருந்தது. வீட்டுக்கு முன் தோட்டத்து மக்கள் அனைவரும் கூடிநிற்பதை காண்கின்றாள். தன் மகள் அனைத்து பாடங்களிலும் பெயிலாகி விட்டமையை கேள்விப்பட்ட சுந்தரம் அவமானம் தாங்க முடியாமல் உரத்தைக் கலக்கி குடித்து விட்டார். தோட்டத்து மக்கள் சுந்தரத்தை உடனே பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போய் விட்டார்கள்.

இதனைக் கேள்விப்பட்ட குமாரி ஐயோ அப்பா..... என கத்திக் கொண்டு பெரியாஸ்பத்திரிக்கு ஓடுகின்றாள். அங்கு தன் தந்தையின் நிலையைப் பார்த்த குமாரி கத்தி கதறுகின்றாள் . அப்பா நீங்க இல்லாம நா வாழ மாட்டேன். அப்பா என்ன மன்னிச்சிடுங்க நா செஞ்ச தவறையெல்லாம் உணர்ந்துட்டேன். நா எப்டியாவது இரண்டாம் முறை படித்து பாஸ்பண்ணுவேன் என்ன நம்புங்க...... என தந்தையைக் கட்டிப்பிடித்து அழுகின்றாள். தாய் சோகத்தில் கணவனின் பக்கத்தில் இருக்கின்றாள்.

ஒரு கிழமையின் பின் தந்தை டிக்கெட் வெட்டி (சுகமாகி) வீட்டுக்கு வரும் போது, தன் மகள் ஒரு இலட்சிய வெறியோடும், வைராக்கியத்தோடும் நான் டாக்டராக வருவேன் என கதவில் எழுதிப் போட்டு படித்துக் கொண்டிருக்கின்றமையை பார்த்து நிம்மதியடைகின்றார்.

# சேர் பொன்னம்பலம் இராமநாதன்




ப்ரியமதா பயஸ்

பொன்னம்பலம் இராமநாதன் யாழ்ப்பாணம், மானிப்பாயைச் சேர்ந்த இராசவாசல் முதலியார் (கேட் முதலியார்) அருணாசலம் பொன்னம்பலம் என்பவரின் இரண்டாவது புதல்வராகக் கொழும்பில் பிறந்தார். இவர் குமாரசாமி முதலியார், சேர் பொன்னம்பலம் அருணாசலம் ஆகியோரது சகோதரர். ஆரம்பக் கல்வியை கொழும்பு இராணிக் கல்விக் கழகத்தில் (கொழும்பு வேத்தியர் கல்லூரி) கற்றார். 13 ஆவது வயதில், மாநிலக் கல்லூரியில் கல்வி கற்பதற்காகச் சென்னைக்கு அனுப்பப்பட்டார். சேர் ரிச்சட் மோர்கனின் கீழ் சட்டக் கல்வி பயின்று 1873 இலே உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஆனார். பின்னர் சொலிசிட்டர் ஜெனரலாகப் பதவி வகித்து 1906 ஆம் ஆண்டு, பணி ஓய்வு பெற்றார்.

சேர் பொன்னம்பலம் இராமநாதன் இலங்கையின் தேசியத் தலைவர்களுள் ஒருவராகக் கருதப்பட்டவர். சிங்களவரும், தமிழரும் இன வேறுபாடு பாராது அவரைத் தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டனர்.

1879 ஆம் ஆண்டு இலங்கையின் சட்டசபைக்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 1911 ஆம் ஆண்டில் நடைபெற்ற இலங்கையின் சட்டசபைக்கான முதலாவது தேர்தலில் முழு இலங்கையரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே உறுப்பினராக இராமநாதன் தெரிவு செய்யப்பட்டார்.


1915ஆம் ஆண்டு இலங்கையில் சிங்கள – முஸ்லிம் இனக் கலவரம் ஒன்று ஏற்பட்டது . இது சிங்கள அரசியல் தலைவர்களால் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டதாகப் பிரித்தானிய ஆளுநர்கள் அறிந்துகொண்டனர். உடனடியாகப் பிரித்தானிய ஆளுநரால் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டது. அத்துடன் அந்த இனக்கலவரத்திற்கு காரணமானவர்களைக் கைது செய்யவும் கட்டளையிட்டது. அந்த இனக்கலவரத்திற்கான பிரதான காரணங்களாக டீ.எஸ் சேனநாயக்கா, டீ.எஸ் விஜேவர்தனா, டொக்டர் நெயிசர் பெரேரா, ஈ.டீ.த.சில்வா, ஆர்.டீயஸ் பண்டாரநாயக்கா, எச்.அமரசூரிய. ஏ.எச்.மொல மூறே போன்ற இலங்கையின் முன்னணி சிங்கள அரசியல் தலைவர்களே இருந்தனர். இவர்களைக் கைது செய்த பிரித்தானிய அரசு கடும் நடவடிக்கை எடுத்தது. அவர்களைப் பிரித்தானியாவில் சிறையில் அடைத்தது. அத்துடன் இனக்கலவரத்திற்கு முக்கிய காரணமான அனைவருக்கும் மரணத் தண்டனை வழங்கப்பட்டது.

இனக்கலவரத்தை ஏற்படுத்திய குற்றம் பாரிய குற்றம் என்றபோதும், அவர்களுக்கு மரண தண்டனை வழங்குவதை விரும்பாத சேர் பொன்னம்பலம் இராமநாதன், பிரித்தானிய அரசை எதிர்த்து, சிங்கள அரச தலைவர்களின் உயிரைக் காப்பாற்றும் முகமாக மீட்பு போராட்டம் செய்து, அவர்களை மீட்டவர் என்பதும் இலங்கை அரசியல் வரலாற்று நிகழ்வாகும்.

1897ஆம் ஆண்டு விக்டோரியா மகாராணியாரின் 50ஆவது ஆண்டு விழாவிற்கான இலங்கையின் பிரதிநிதியாக கலந்து கொள்ள பொன்னம்பலம் இராமநாதன் அவர்களே தெரிவு செய்யப்பட்டார். அந்த விழாவின் போது அவருக்குப் பிரித்தானிய அரசினால் இலங்கையின் முழுமையான தேசியவாதி எனும் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. 1921 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசினால் சேர் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

1921 ஆம் ஆண்டு மனிங் அரசியல் சீர்திருத்தத்தின் அடிப்படையிலான தேர்தலில் கொழும்பு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை சேர். ஜேம்ஸ் பீரிஸ், சமரவிக்கிரம போன்ற சிங்களத் தலைவர்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் இலங்கைத் தேசிய காங்கிரஸிலிருந்து வெளியேறினார். 1921 ஒகஸ்ட் மாதம் தமிழர் அடையாள அரசியலை நிலை நிறுத்தும் வகையில் தமிழர் மகாஜன சபையை உருவாக்கினார். அதன் தலைமைப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்.

அவர் 1924 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி தனது 71 ஆவது வயதில் மதுரை மீனாட்சியம்மன் ஆலயப் பிரதேசத்தில் காலமானார். இவரது மறைவானது ஈடு செய்ய முடியாத தொன்றாகும். இவரது ஈமக்கிரியைகள் பல மக்களின் முன்னிலையில் கொழும்பு பொது மயானத்தில் நிறைவேறின.




# கலைக் கதிர்



# காற்று மரங்களை அசைக்கின்றது

## நூலாய்வு

இலக்கிய பிரதிகள் ஈசல்கள்போல வந்துகொண்டு தான் இருக்கின்றன. ஆனால் அவற்றின் பேசுபடு தன்மை அல்லது நிலைத்திருத்தல் என்பது கேள்விக் குறியே. பிரதிகள் மீதான துல்லியமான திறனாய்வே அந்த பிரதியின் கனத்தையும் அது வாசகரிடையே பரவலாகும் வீதத்தினையும் நிர்ணயம் செய்கிறது. உதாரணமாக கூறினால் புதிதாக வந்த திரைப்படங்கள் குறித்து வருகின்ற விமர்சனங்களின் பின்பே சினிமா ரசிகர்கள் அந்த படத்தினை பார்ப்பதற்கு தேர்வு செய்தலினை கூறிடலாம். இந்த கருத்துநிலை இலக்கியப்பிரதிகட்குமானதே. எனவே பிரதியினையும் படைப்பாளியினையும் செம்மைப்படுத்த துல்லியமான திறனாய்வுகள் அவசியமானவையே என்பது யாராலும் மறுக்கப்படமுடியாததாகும்.

துரதிஷ்டவசமாக ஈழத்து தமிழ் இலக்கிய பரப்பில் நுண்ணிய திறனாய்வுகள் இடம்பெறுவது குறைவாகவே உள்ளன. இங்கு திறனாய்வு என்ற பெயரில் பொழிப்புரைகளும் பாராட்டுரைகளுமே மிகுதியாக காணப்படுகின்றன. இது எந்த வகையிலும் இலக்கிய வளர்ச்சிக்கு தோதானதல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எழுத்தாளர் தேவகாந்தன் அவர்கள் ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்து தற்போது மேற்கில் வசித்து வருபவர். எழுத்துலகில் ஏறத்தாழ ஐம்பது வருட அனுபவத்தினை கொண்டவர். சிறுகதை, நாவல் மற்றும் கட்டுரை போன்ற பல்வேறு தளங்களில் இயங்கி வருபவர். குறிப்பாக கூறினால் கலிங்கு மற்றும் கனவுச்சிறை போன்ற கனதியானதும் நெடியதுமான நாவல்களை எழுதி தன்னை நிலைநிறுத்திய படைப்பாளி.

தேவகாந்தன் அவர்களின் திறனாய்வு கட்டுரைகளின் தொகுதியாக வெளிவந்துள்ள நூலே காற்று மரங்களை அசைக்கின்றது என்பதாகும். இந்த நூலில் அச்சில் வந்த இலக்கிய பிரதிகள் சார்ந்து எழுதிய பத்திகள் பகுதி ஒன்றில் நாற்பத்தைந்து கட்டுரைகளாகவும் ஏனைய இசை மற்றும் நாடகம் சார்ந்து எழுதிய எட்டு கட்டுரைகள் பகுதி இரண்டிலுமாக மொத்தம் ஐம்பத்து மூன்று கட்டுரைகள் காணப்படுகின்றன. இந்த நூலானது காத்திரமான பிரதிகளை தமிழ் கூறு நல்லுலகிற்கு ஈந்து வரும் ஜீவநதியின் பிரசுரமாக வெளிவந்திருக்கிறது.

இந்த பிரதி ஏன் முக்கியமாகிறது என பார்க்கையில் 1990 - 2020 வரையான காலப்பகுதியில் வெளியாகியதும் அரங்காற்றுகை செய்யப்பட்டதுமான பிரதிகளில் காத்திரமான படைப்புக்களை தேர்வு செய்து அவர் நிகழ்த்திய திறனாய்வுகளின் சாரமே இந்நூல். ஏறத்தாழ முப்பது ஆண்டுகளில் வெளியாகிய அல்லது நிகழ்ந்த இலக்கிய புனைவுகள் மற்றும் அரங்கங்களின் சாரமாக இது அமைகிறது. அவரது தேர்வுகளில் சில விடுபாடுகள் இருக்கலாம் எல்லா பிரதிகளின் மீதும் எதிர் வினைகளாற்ற முடியாது. இருப்பினும் கடந்த முப்பதாண்டுகளில் வெளிவந்த பிரதிகளின் போக்கினையும் அந்த காலத்திலான இலக்கிய அனுமதிப்புக்கள் மற்றும் மீறல்களையும் ஓரளவுக்கேனும் புரிந்து கொள் வதற்கு இந்த பிரதி உதவுமென்றால் அது மிகையல்ல.

சில எடுத்துக்காட்டுகள்.

அதிர்ச்சி விமர்சனங்களில் எனக்கு நம்பிக்கையிருப்பதில்லை. என் விமர்சனத்தின் தார்ப்பரியமே படைப்பினை அது அதுவாக இனங்காட்டுவதே .(மீண்டும் வரும் நாள்கள் - மு.புஸ்பராஜன் பக்.08).

ஒரு கலைப்படைப்பு சொல்வதைவிட காட்டுவதையும் உணர வைப்பதையும் முதன்மையாக செய்ய வேண்டுமென்பது விதியாகியிருக்கிறது. (பாவட்டம் பூ - பாலமனோகரன் பக்.35).

வாசிப்பு சூழ்நிலையை சார்ந்ததுமாகும். வாசிப்போனின் அனுபவம் ஒரு கூறாக, வாசிப்பின் சூழ்நிலை இன்னொரு கூறாக பிரதியின் அர்த்தமும் பயனும் அமையும் என்பது பொதுப்புத்தியிலும் விளங்கக்கூடியதே. (ஒரு மரணமும் சில மனிதர்களும் - பக்.43).

மரபுகளை தெரிந்துகொண்டு முன்னேற்றமும் தேவையான மீறலும் என்ற சரியான கோட்பாடு, நாடகவாக்கத்தில் முன்னெடுக்கப்பட இவ்வாறான பிரதிகளின் வரவு முக்கியமானது(தீனிப்போர் நாடகப்பிரதி – இளைய பத்மநாதன் பக்.116)

ரசம்போன கண்ணாடியின் முன்நின்று தன் ஒப்பனையை சரி பார்த்து கொள்வதும் ஒரு குறியீட்டு வெளிப்படுத்துகைதான். அர்த்தங்கள் மறைந்துபோன காலத்தின் காட்சிப்படுத்துகையன்றி அது வேறல்ல(நட்ராஜ் மகராஜ் - தேவிபாரதி பக்.177)

ஈழத்து தமிழ் இலக்கிய உலகில் திறனாய்வு முறை பின்னடைவு கண்டிருக்கின்ற இந்த நிலையில் விமர்சன நோக்குடன் கூடிய பிரதிகட்கும் பஞ்சமேற்பட்டிருக்கும் நேரத்தில் தேவகாந்தன் அவர்களின் காற்று மரங்களை அசைக்கிறது தேக்கத்தின் மீது அசைவியக்கமொன்றை தொடங்கி நம்பிக்கை ஒன்றினை திறக்கின்றது. பிரதிகள் தொடர்பில் ஆய்வு மற்றும் விமர்சனங்களை முன்வைக்க விரும்புவோருக்கும் திறனாய்வு துறையில் பயில விரும்புவோருக்கும் இந்த நூல் பயன்மிக்கதோர் படைப்பாகும்.

நூலின் பின்னுரையில், காற்று மரங்களை அசைக்கின்றது என்ற தலைப்பானது காற்றின் விசைக்கேற்ப மரங்களசையுமெனும் இயல்பான பொருளோடு நூல்களின் கனதிக்கேற்ப வாசக இதயங்கள் அதிர்வு கொள்கின்றன என்ற அர்த்த வியாபிப்பையும் தன்னுள்ளாக கொண்டிருக்கிறது, என குறிப்பிடப்படுவதை நிரூபணம் செய்யும் வகையில் இந்த நூலும் கனதியும் பெறுதியும் நிறைந்த ஒன்றென்றால் அது மிகையல்ல.

**- தி.லலிதகோபன் -**

# இல்லை எங்களது திருநாட்டில்...!

நாடு சுபீட்சத்தை நோக்கி
நகருகின்றது !
நமக்கென்னடா குறைச்சல் இங்கு?

வீடெல்லாம் விளைபொருள்களால்
குவிந்து கிடக்கின்றன.
தட்டுப்பாடு என்ற சொல்லுக்கே
தட்டுப்பாடு,
இல்லையென்ற சொல்லே இங்கு
இல்லாமற் போய்விட்டது.
பசி பட்டினி பிணி தொற்று தொற்றா
நோய்கள் மாயமாகிவிட
ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்கள்
ஆக்கிரமிப்பு அவலங்கள்
சங்கடமான சம்பளவுயர்வு வேலை
நிறுத்தங்களற்றதோர் பூமியாய்
சிங்கப்பூர் கூட இப்போ
எங்க ஊர்களைப் பார்த்து
புருவமுயர்த்திப் பார்க்கின்றது

நாமெல்லாம் சுபீட்சத்தின்
உச்சத்தில் மாத்திரமல்ல
சுகமான சுதந்திரத் தாயின் மடியிலல்லவா
தவழுகின்றோம்

பயங்கரவாத தடைச்சட்டமுமில்லை
பயந்து பயந்து வாழுகின்ற
நிலைகளுமில்லை
ஊழலுமில்லை பதுக்கலுமில்லை
பொய் புரட்டு ஒப்பந்த சூறையாடல்கள்
ஏதுமில்லா
பேரினவாத பேய்களின் ஆட்டமோ
பெருமதவாத தொல்லைகளின்
நிழல்களோ அற்ற நாடாக நமது நாடு
நாலு இனங்களும் நல்லிணக்கத்துடனே
கைகோர்த்து சம அந்தஸ்தை தமதாக்கி
ஆனந்தம் பொங்க சிரித்த முகங்களாய்
வாழுமொரு சுதந்திர பூமியாக
எமது தேசம்....!

எங்கும்...இரத்தஞ்சிந்தாப் புரட்சியால்
எழுந்ததொரு சுபீட்சம்...சமத்துவம்.

இருளில் மூழ்கும் தருணமுமில்லை
கணப்பொழுதும் ஓளசிந்தும் கோபுரமாய்
ஓளருதடா நம் தேசம்.....
நிம்மதியின் பசுமையான குடைநிழல்
எத்தனை இன்பம் ....ஆஹா
மக்களது ஆனந்தக்கூத்துக்களும்
பாட்டுப் பரவசங்களுமாய் எங்கெங்கும்......!
நானும் எழுந்து கூத்தாடி.....ஐயையோ....!

கட்டிலில் இருந்து கீழேவிழுந்து
அவசரமாய் விழித்தேன் நள்ளிரவில்...
எல்லாமே கனவா....?
என்ன ஒரு ஏமாற்றம்....?
சுற்றும் முற்றும் பார்த்தேன் எங்கும் இருள்
மின் துண்டிப்பின் பிடியில் தேசம்...!

**- ஷெல்லிதாசன் -**

# வரைந்து முடிக்கப்படாத ஓவியம்

என்னை நானே அறிய முன்
கிறுக்கல்களால் வடிவமைத்தாய்
அன்பு மை கொண்டு
கரையாத காதலுடன்
உயிர் பெற்ற
ஆன்மாவின் சாயலுடன்
உருப்பெற்று வந்த ஓவியம்
முற்றுப் பெறமுன்பே
மையின் முடிவுடன்
குறைகண்டது ஓவியம்
புன்னகை தொலைத்துப்
பொலிவிழந்த பெண்ணின்
தோற்றத்துடன் அவளாவேயம்

**டச்ஸனா கிருஸ்ணானந்தன் - கிளிநொச்சி**

# முன்னாள் காதலி

தொலைந்த பணப்பையில்
தொலையாமல் இருக்கும்
ஒற்றை சுருள் முடி

வருடிச்செல்கிறது
வாலிப வேலிகளை

பாறையாகிப் போனவனை
பலமைல்கள் நகர்த்திச் சென்ற
பிடிமானத்தின் பரிமாணமே

கோபுரம் மறைக்கும்
கூந்தல் உதிர்த்த
பூவே புதிரே

அரசமரமாய் ஆங்காங்கே
முளைத்து செல்கிறாய்
உள்ளக் கானகத்தில்

பிள்ளையாரை பிரதிஷ்டை
செய்ய முனைகையில்
புத்தனை கண்டெடுத்து
ஆராதிக்கிறாய்

பூசித்துக் கடக்கின்றேன்
புன்னகையுடன்
பேருந்து காதலி உன்னை

**- திருமலை சீட்டு -**

காலைக்கதிர் Kalaikkathir

# பொறுப்புக் கூறலில் இலங்கை தொடர்பில் பன்முனைப்பட்ட அணுகுமுறையை சர்வதேசம் முன்னெடுக்க வேண்டும்!

## நாடுகடந்த தமிழீழ அரசு வலியுறுத்தல்

தமிழர்கள் மீதான சிங்கள – பௌத்த அரசின் கொடுங்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலுக்கு வழிவகை செய்ய, பல்முனைப்பட்ட அணுகுமுறையொன்றை சர்வதேச சமூகம் முன்னெடுக்க வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஶ்ரீலங்கா தொடர்பிலான ஐ.நா. மனித உரிமைச்சபை ஆணையாளர் பாலே அம்மையாரின் அறிக்கை தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசு விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இராணுவ மயமாக்கல் மற்றும் 'இன–மதவாதத்தின் தொடர்ச்சியான செயற்பாடுகள் ஜனநாயக அமைப்புக் களை சிதைக்கின்றன' என்ற ஐ.நா. மனித உரிமைச் சபை ஆணையளரின் கூற்றை சுட்டிக்காட்டியுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், ஶ்ரீலங்கா அரசு, அதன் அரச கட்டமைப்புகள், அரச குழுமம் ஆகியன மியான்மர், ஈரான் நாடுகளில் இருக்கின்றமை போலவே மதவாத அடிப்படைவாதிகளின் பிடியில் சிக்கியிருப்பதாக தெரிவித்துள்ளதோடு, இந்தக் கட்டமைப்புக்கள் தமிழருக்கான நீதிக்கும், பொறுப்புக்கூறலுக்கும் முட்டுக்கட்டையாக அமைந்துள்ளன எனத் தெரிவித்துள்ளது.

'தண்டனைப் பயமின்மை ஶ்ரீலங்காவின் கலாசாரத்தில் ஊறிப்போன ஒன்று என்பதோடு தனது அரசியலில் சிங்கள பௌத்தமத இனவாதம் ஆழமாக வேரூன்றியுள்ளது' என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், ஶ்ரீலங்கா நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனது அவதானிப்பையும் இந்த விடயத்தில் சுட்டிக்காட்டியுள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், 'கொடுங்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலுக்கு தடையென்பது அரசியல் திட மின்மை அல்லது செயல் திறனின்மையோ காரணமல்ல என்பதற்கு அப்பால், சிங்கள பௌத்த மத அடிப்படை வாதமே காரணமென்பது தெளிவாகின்றது' என இடித்துரைத்துள்ளது.

இவ்வகையிலேயே ஶ்ரீலங்கா தொடர்பிலான .மனித உரிமைச்சபை ஆணையாளரின் அறிக்கையின் முன் வைத்தது போல், பன்னாட்டு சமூகம் சர்வதேச நீதிக்கான நோக்கைக் கொள்ள வேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கோரியுள்ளது.

மேலும் நாடுகடந்த தமிழீழ அரசு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு –

ஆணையாளர் தனது அறிக்கையில் பயங்கரவாதத் தடுப்பூசி தொடர்பாக அதனை உபயோகிப்பதற்கு ஒரு தற்காலிக தடையும் அதன் மீதான அடிப்படை மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் கேட்டுள்ளார். (மார்ச் 7ஆம் திகதி 2022) மனித உரிமைகள் கண்காணிப்பகம், (மார்ச் 4-2022) சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியனவற்றின் வாய்மொழி அறிக்கையிலும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் சித்திரவதைகளை ஏதுவாக்கும் வகையில் திரும்பப் திரும்ப உபயோகிக்கப்பட்டு வருவதாகவும், அது காணாமல் ஆக்கப்படுவோரை அதிகப்படுத்தும் அபாயத்துக்கு இட்டுச்செல்வதாகக் கூறியுள்ளது. 'பயங்கரவாதத் தடைச் சட்டம் தமிழரையே அதிகமாகப் பாதிப்பதாக' மனித உரிமைகள், மற்றும் பயங்கரவாதம் தொடர்பான ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் பென் எமர்சன் கூறியுள்ளார்.

1979 இல் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஒரு சட்டமாக நிலைகொண்டதில் இருந்து பல மனித உரிமைகள் அமைப்புக்களாலும் அதனை இரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியான அதனுடைய இருப்பு, ஶ்ரீலங்கா அரசால் உத்தேசிக்கப்பட்டவாறான திருத்தங்களோடு கூட, ஶ்ரீலங்காவின் அரசியல்–இராணுவ கட்டமைப்புக்கள் மீதான சிங்கள பௌத்த மத அடிப்படைவாதத்தின் கிடுக்குப் பிடியை நிலைப்படுத்தவே செய்யும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாகியதற்கு காரணமே தமிழர்கள் மீதான இனவழிப்பும், சிங்கள– தமிழ் அரசியல் தலைமைகள் இன முரண்பாடுகளுக்கான தீர்வை எட்டுமுகமாக எடுக்கப்பட்ட ஒப்பந்தங்களை சிங்களத் தலைவர்கள் தொடர்ச்சியாக மீறியதும் தான் என இரா. சம்பந்தன் தனது அறிக்கையில்கூறியுள்ளார். சிங்கள பௌத்த இனவாதமே அதன் வேராக இருப்பதே காரணமாகும்.

வழமைபோலவே, ஐ.நா. மனித உரிமைச்சபை ஆணையாளரது அறிக்கைக்கு ஶ்ரீலங்கா பௌத்த இனவாத அரசு பதிலளிக்கையில், சர்வதேச அமைப்புகளை, குறிப்பாக மனித உரிமைச்சபை, தமது 'நாட்டு இறை யாண்மை' என்ற கோட்பாட்டின் பின் னின்று தாக்கியும் பயமுறுத்தியும் உள்ளது எனத் தெரிவித்துள்ளது. இது ஶ்ரீலங்காவின் சந்தர்ப்பவாதப் போக் கையே காட்டுகிறது, அதாவது, பொரு ளாதார மேம்பாட்டுக்கு நிதியுதவி, பேரிடர்காலத்தில் தனது மக்களுக்கு தடுப்பூசி போடுதல் எனத் தனக்குத் தேவை என வரும்போது, சர்வதேச அமைப்புக்களிடம் செல்வதும், ஆனால் தான் இழைத்த கொடுங் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் என வரும் போது நாட்டின் இறையாண்மை என்ற கேடயத்தைப் பாவிப்பதுமாக இருக்கின்றது. சர்வதேச குற்றங்கள், மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபடும் போது, ஶ்ரீலங்கா அரசு இறையாண்மை என்ற அடிப்படையிலான தற்காப்பை இழக்கிறது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இங்கே குறிப்பிட விரும்புவது என்னவெனில், ஶ்ரீலங்காவின் 1972இல் உருவாக்கப்பட்ட அதன் முதலாவது குடியரசுக்கான அரசமைப்பு, அல்லது 1978 இல் உருவாக்கப்பட்ட அதன் இரண்டாவது அரசமைப்பிலோ தமிழர்கள் எவ்வகையிலும் பங்குபற்றவோ அல்லது அதனை ஆதரிக்கவோ இல்லை. அவை தமிழர்களின் பெரும் ஆட்சேபணைகளுக்கிடையே தமிழர்கள் மீது சுமத்தப்பட்டவையாகும். ஆகவே, ஶ்ரீலங்கா அரசின் இந்த 'நாட்டின் இறையாண்மை' என்ற கோட்பாட்டின் பின்னே தமது கொடூர குற்றங்களை மறைக்கப்பார்ப்பது என்பது ஒரு தார்மீகக் கபடநாடகம் ஆகும்.

தற்போது சிறிலங்கா அரசு, இலங்கைத்தீவின் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பகுதிகளான வடக்கு கிழக்கில், தமிழ் பேசும் மக்களை ' சிறுபான்மையினராக' ஆக்கும் விதத்தில் குடிப்பரம்பலை மாற்றி அமைக்கும் காரியங்களில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

அமெரிக்காவின் சான்பிரான்ஸிஸ்கோவை தளமாக கொண்டுள்ள ஓக்லண்ட் அமைப்பு 2021 மார்சில் வெளியிட்ட 'முடிவற்ற யுத்தம்' என்ற தமது ஆய்வுக்கட்டுரையில் 'தமிழர் பெரும்பான்மையாக செறிந்து வாழும் பிரதேசங்களில் வலிந்து மேற்கொள்ளப்படும் சிங்கள குடியேற்றங்கள், இராணுவ வெற்றிச் சின்னங்கள், அகழ்வாராய்வு ஒதுக் கிடங்கள், வனவிலங்கு காப்பகங்கள், வன ஒதுக்கிடங்கள் மற்றும் சிறப்பு பொருளாதார பிரதேசங்கள் அமைக் கப்படுகின்றன. இவை யாவுமே, தமிழர்களது பிரதிநிதிகளிடம் சம்மதமோ அல்லது எந்த விதமான ஆலோசனைகளும் தமிழர் தரப்பிடம் பெறப்படாமலே, தமிழர்களது நிலங்களை அபகரிக்கும விதமாகவும், அவர்களது அரசியல் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் விதமாகவும், மற்றும் அவர்களது அடையாளத்தையே துடைத்து அழிக்கும் வகையிலும் தெளிவான ஒரு நோக்கில் செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் ஶ்ரீலங்கா அரசாங்கம் சிங்கள மக்களது விகிதா சாரத்தை அதிகரிக்கும் விதமாக சிங்கள கிராமங்களை தமிழ் மாவட்டங்களோடு இணைக்கும் வகையில் எல்லைகளை மறுசீரமைக்கிறார்கள். இது ஶ்ரீலங்காவின் அதிகமாக சிங்களவரைக் கொண்ட இராணுவம் தமிழர் பிரதேசங்களில் நிலைகொண்டுள்ளமையால் சாத்தியப்படுகிறது. இந்த தமிழர் தாயகத்தின் நிலம் அபகரித்தலால் தமிழ் மக்களது தனித்துவமான அடையாளம் அற்றுப் போய் விடும்.

தமிழரின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் வகையில் பொதுவாக்கெடுப்புக்கான கோரிக்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைச்சபை ஆணையாளருக்கு ஐந்து தமிழ் அரசியல் கட்சிகளால் அனுப்பப்பட்ட கடிதத்தை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கவனத்தில் கொள்கின்றது. ஆயினும், நாட்டில் நிலவும் சரித்திர பூர்வமான சிங்கள பௌத்தமத அடிப்படைவாதம், அத்துடன் சிங்களத் தலைவர்கள் அவர்கள் இழைக்கும் கொடூர குற்றங்களுக்குத் தண்டனைப் பயமின்மை மற்றும் தமிழர்களைப் பரவலாக துன்புறுத்துதல், தமிழரது அடையாளங்களை அழித்தல் என்பவற்றை மனதில் கொண்டு, தமிழர்தாம் இங்கே பாதிக்கப்பட்டவர்கள் என்ற நிலையில் அவர்களது அரசியல் எதிகாலத்தைத் தீர்மானிப்பதற்கு அனுமதிக்க வேண்டும். ஆகையால், ஐ.நா. மனித உரிமைச்சபை ஆணையா ளர் பாலே அம்மையாரின் அறிக்கைக்கு சர்வதேச சமூகம் கவனம் கொடுத்து ஶ்ரீலங்கா அரசு பொறுப்புக் கூறும் வண்ணம் ஒரு மாறுபாடான ஏற்பாட்டை எடுப்பதன் பேரில் இலங்கைத் தீவில் தமிழருக்கான அரசியல் தீர்வு, நீதி மற்றும் பொறுப்புக் கூறல் என்பவற்றை சாத்தியமாக்க பல்முனைப்பட்ட அணுகுமுறையொன்றை சர்வதேச சமூகம் முன்னெடுக்க வேண் டும்என நாடுகடந்த தமிழீழ அரசு கோரியுள்ளது.

# தமிழ் அரசியல் தலைவர்கள் இணைந்து பிரி. வெளிவிவகார அமைச்சருக்கு கடிதம்

## இலங்கை இராணுவ அதிகாரிகளை பிரித்தானியா தடைசெய்ய வலுயுறுத்தி

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த தெற்கு, மத்திய ஆசியா, ஐக்கிய நாடுகள் மற்றும் பொதுநலவாய நாடுகள் விவகார அமைச்சரும் மோதல்களின் பாலியல் வன்முறைகளைத் தடுப்பதற்கான பிரித்தானியப் பிரதமரின் சிறப்புப் பிரதிநிதியுமான அதி மதிப்பிற்குரிய ரரீக் அஹமட் பிரபு, இலங்கையில் தொடரும் கடத்தல்கள், சட்டவிரோத கைது, சித்திரவதை, அதிகரிக்கும் மர்மகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்களைப்பற்றிக் கருத்து வெளியிடத் தவறியமையை சுட்டிக்காட்டியும், முக்கிய தமிழ் அரசியல் தலைவர்களை சந்திக்கத் தவறியமையைக் கண்டித்தும், கடந்த 4 பெப்பிரவரி அன்று, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் உட்பட ஒன்பது முக்கியஸ்தர்கள் இணைந்து விரிவான ஆவணம் ஒன்றை, உரிய ஆதாரங்களுடன் அனுப்பி வைத்திருந்தனர்.

மேற்படி ஆவணத்துக்கு தமது முழுமையான ஆதரவை வெளிப்படுத்தும் முகமாகவும், அதற்கு பிரித்தானிய அமைச்சர் பதில் வழங்கவேண்டும் என்பதை வலியுறுத்தும் நோக்குடனும் மேலதிக கடிதம் ஒன்றை மேலும் மூன்று முக்கிய தமிழ் அரசியல் தலைவர்கள் இணைந்து இந்தவாரம் அனுப்பி வைத்துள்ளனர். தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சுரேஸ் பிறேமச் சந்திரன் மற்றும் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான தேவராஜா கலையரசன் ஆகியோர் இணைந்து கையொப்பமிட்டே இந்தக் கடிதம் அனுப்பட்டுள்ளது. இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்களைப் பட்டியலிட்டுள்ள அந்தக் கடிதத்தில் அண்மையில் இடம்பெற்ற மூத்த விடுதலைப்புலி போராளி ஆதவனின் மர்மமான கொலை, சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித சமரவிக்ரமவின் வீட்டுக்கு வெள்ளை வானில் வந்த ஆயுதம் தாங்கிய குழு அவரை அச்சுறுத்தி விட்டு வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் மற்றும் இலங்கைத் தமிழரசுக்கட்சி இளைஞர் பிரிவின் உதவி செயலாளர் நிதர்சனை வெள்ளை வான் ஒன்றில் கடத்துவதற்கு முற்பட்டமையையும் என பல சம்பவங்கள் ஆதாரங் களுடன் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

இவற்றைவிட எம்மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் ஏனைய மனித உரிமை மீறல்கள் பற்றியும் மக்களின் பிரதிநிதிகளாகவுள்ள நாம் நேரடியாக அறிவோம் எனவும் மேலதிக தகவல்கள் மற்றும் ஆதாரங்களை தனிப்பட்ட ரீதியில் தங்களுடன் பகிர்ந்துகொள்ளத் தயாராக இருக்கிறோம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் இன்னும் தொடரும் கடத்தல்கள், சட்டவிரோத கைது, சித்திரவதை, அதிகரிக்கும் மர்மகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, இனப்படுகொலையைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான சர்வதேச மையத்தால் திரட்டப்பட்ட விரிவான ஆதாரங்கள் அடங்கிய விரிவான பட்டியலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தின் அடிப்படையில் கடந்த நவம்பர் 2019 முதல் இன்று வரையான காலப் பகுதியில், ஊடகங்களால் பதிவுசெய்யப்பட்ட செய்திகள் அடிப்படையில் மட்டும் 848 மனித உரிமை மீறல் சம்பவங்கள் ஆவணப்படுத்தப்பட்டு அதற்கான ஆதாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மட்டுமன்றி தொடரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பிரித்தானியா அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இவற்றுக்குக் காரணமான இலங்கை இராணுவ அதிகாரிகள் மீது பிரித்தானியா தடைவிதிக்க வேண்டும் என்றும் மீண்டும் வலியுறுத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நாணய நிதியத்திடம் உதவிக்குப் போனாலும் அது கிடைப்பதில் இடைஞ்சல்கள் அதிகமாம்!

பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் இலங்கை அதிலிருந்து மீளுவதற்கு சர்வதேச நாணய நிதியத்திற்கு கோரிக்கைகள் அடங்கிய யோசனைகளை முன்வைத்தாலும் உடனடியாக நிதியம், நிதியுதவிகளை வழங்காது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள, நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ எதிர்வரும் ஏப்ரல் மாதம் அமெரிக்காவின் வொஷிங்டனில் அமைந்துள்ள சர்வதேச நாணய நிதியத்திற்கு விஜயம் செய்ய உள்ளார்.

அப்போது அவர், கோரிக்கைகள் அடங்கிய யோசனைகளை நாணய நிதியத்திடம் சமர்ப்பிக்க உள்ளார். எனினும் கோரிக்கைகளை முன்வைத்தாலும் உடனடியாக நாணய நிதியம் நிதியுதவிகளை வழங்காது என்று கூறப்படுகிறது.

அதற்கு நீண்ட செயற்பாடுகள் இருக்கின்றன. அத்துடன் கடந்து செல்ல வேண்டிய சில தடைகளும் இருக்கின்றன. இதில் முதல் தடை சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பு நாடுகளின் வாக்கெடுப்புக்கு இலங்கை உட்பட வேண்டும் என்பதாகும்.

வாக்கெடுப்பில் இலங்கை குறைந்தது 50 சத வீத வாக்குகளை பெற வேண்டும். இலங்கை 11 உறுப்பு நாடுகளில் வாக்குகளை பெற்றாக வேண்டும்.

தற்போது காணப்படும் சூழ்நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பு நாடுகளான சீனா, இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளின் வாக்குகளை பெறுவது இலங்கைக்கு சிரமமாக இருக்கலாம்.

அதேவேளை பிரித்தானியா உட்பட ஐரோப்பிய நாடுகள் இலங்கை சம்பந்தமாக எப்படியான பிரதிபலிப்பை வெளியிடும் என்பது சிக்கலுக்குரியது. இந்த நாடுகள் எடுக்கும் முடிவின் அடிப்படையிலேயே சர்வதேச நாணய நிதியம், இலங்கைக்கு நிதியுதவியை வழங்குவதா, இல்லையா என்று தீர்மானிக்கும் எனக் கூறப்படுகிறது.

## பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களின் தரம் மின்வெட்டால் பாதிப்புற்றிருக்கலாம்

### சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

இலங்கையில் ஏற்பட்டுள்ள தொடர் மின்வெட்டின் காரணமாக பதப்படுத்தப்பட்ட உணவின் தரம் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொதுமக்களுக்கு இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

துர்நாற்றம், நிறம் அல்லது வித்தியாசமான வடிவத்தில் இறைச்சி உள்ளிட்ட பதப்படுத்தப்பட்ட உணவுகளை விற்பனை செய்வதையோ அல்லது கொள்வனவு செய்வதையோ பொதுமக்கள் தவிர்க்க வேண்டும் என சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது –

கடந்த இரண்டு வாரங்களில், மனித நுகர்வுக்குத் தகுதியற்ற இறைச்சி மற்றும் பாலை தொடர்ந்து விற்பனை செய்த 387 கடைகளுக்கு எதிராக அதிகாரிகள் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர். தொடர்ந்து ஏழு மணி நேர மின்வெட்டு காரணமாக குளிர்சாதன பெட்டிகள் செயற்படாததால் உணவுப் பொருள்கள் பழுதடைகின்றன.

கடைகளில் பதப்படுத்தப்பட்ட உணவுகளை கொள்வனவு செய்யும் போது நுகர்வோர் அவதானமாக இருக்க வேண்டும். அத்துடன் வர்த்தகர்கள் வாடிக்கையாளர்களுக்கு பொருள்களை விற்பனை செய்யும் போது பொறுப்புடன் இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மக்களை வீதிக்கு இறங்கி போராட அழைக்கின்றார் ஜே.வி.பி. தலைவர்

கொழும்பு, மார்ச் 13

ராஜபக்ஷ குடும்பத்தினால் தற்போது நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வைக் கோரி, மக்கள் வீதிக்கு இறங்கி போராட வேண்டும் என்று அழைப்பு விடுப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில் –

வரலாற்றில் முதல் தடவையாக டொலருக்கு சமாந்தரமாக ரூபாவின் பெறுமதி பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

முன்னைய காலங்களில் எரிபொருள் விலை 2 அல்லது 3 ரூபா அடிப்படையிலேயே அதிகரித்தது.

ஆனால் தற்போது ஒரே சந்தர்ப்பத்தில் 75 ரூபாவினால் அதிகரிக்கப்படுகிறது. கடந்த பெப்ரவரி 6 ஆம் திகதிக்கும் மார்ச் 10ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் ஐ.ஓ.சி. நிறுவனம் டீசல் லீற்றரொன்றின் விலையை 93 ரூபாவாலும், பெற்றோல் லீற்றரொன்றின் விலையை 90 ரூபாவாலும் அதிகரித்துள்ளது.

.எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைகின்றமை ஆகிய இரு காரணிகளும் நாட்டின் அனைத்து துறைகளிலும் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

நாட்டில் பொருளாதாரம் மிகவும் பாரதூரமான நிலையிலுள்ளது. ராஜபக்ஷ குடும்பத்தினர் முழு நாட்டையும் சீரழித்துள்ளனர்.

நிதி அமைச்சரும், மத்திய வங்கி ஆளுனரும் நித்திரையிலிருந்து விழித்தவுடன் அவர்கள் மனதில் தோன்றும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துகின்றனர். இருவரும் ஒருவருக்கொருவர் மாறுபட்ட தீர்மானங்களையே எடுக்கின்றனர். இலங்கை வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இவ்வாறானதொரு நெருக்கடி நிலைமை ஏற்படவில்லை.

நாட்டின் தற்போதைய உண்மை நிலைமையை ஜனாதிபதி மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். கடந்த திங்களன்று 40 000 மெட்ரிக் தொன் எரிபொருளுடன் நாட்டுக்கு கப்பலொன்று வருகை தந்துள்ளது.

எவ்வாறிருப்பினும் அதற்கு செலுத்துவதற்கான 51 மில்லியன் டொலரை செலுத்தாமையால் அதிலிருந்து எரிபொருளை இறக்குமதி செய்ய முடியாத நிலைமை காணப்படுகிறது. ஜனாதிபதி வேறொரு கனவுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கு பொருளாதார பேரவை நியமிக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடிகளுக்கு காரணமானவர்களே அந்த பேரவையின் அங்கத்தவர்களாகவும் உள்ளனர்.

சாதாரண தரத்தில் கணித பாடத்தில் சித்தி பெறாதவர்கள் கூட பொருளாதார பேரவையில் அங்கத்துவம் வகிக்கின்றனர். சஜித் தரப்பினரும் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளின் பங்காளிகளே ஆவர். இவர்கள் ஒருபோதும் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வாக அமைய மாட்டார். – என்றார்.

## இன்றைய வவுனியாப் பேரணிக்கு தமிழ் மக்கள் முன்னணி அழைப்பு

கொழும்பு, மார்ச் 13

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று வவுனியாவில் நடைபெறும் பேரணியில் அனைவரையும் அணிதிரளுமாறு முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எம்.பி. அறைகூவல் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

நாட்டிற்கு புதிய அரசமைப்பை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை சிங்கள, பௌத்த பேரினவாத அரசு முன்னெடுத்து வருகின்றது. ஸ்ரீலங்காவுக்கான நான்காவது அரசமைப்பு மிக இறுக்கமான சிங்கள, பௌத்த ஆதிக்கத்தை கொண்ட ஒற்றையாட்சி அரசமைப்பாகவே அமையவுள்ளது. இந்நிலையில் தமிழ்த் தரப்பின் கடமையானது ஒற்றையாட்சியை முற்றாக நிராகரித்து, தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டித் தீர்வை வலியுறுத்துவதாக அமைந்திருக்க வேண்டும்.

அந்தவகையில், வடக்குகிழக்கிலுள்ள பொதுசன அமைப்புக்களையும், ஒற்றையாட்சியை நிராகரிக்கும் அரசியல் தரப்புக்களையும் இணைத்து – ஒற்றையாட்சி அரசமைப்பையும் அதன் கீழான 13ஆம் திருத்தத்தையும் முற்றாக நிராகரித்து – இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, வடக்கு – கிழக்கு இணைந்த தாயகம், தமிழ்த் தேசமும் அதன் இறைமையையும், சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்த ‘சமஸ்டி’ அடிப்படையிலான தீர்வை வலியுறுத்தியும், இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி கோரியும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்குரிய நீதியை வலியுறுத்தியும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வலியுறுத்தியும், அரசியல் கைதிகளினுடைய விடுதலையை வேண்டியும், சிங்கள பௌத்தமயமாக்கலுக்கு எதிராகவும் இன்று 13 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) பி.ப 2.00 மணியளவில் வவுனியா கச்சேரிக்கு அருகாமையிலுள்ள மாவீரன் பண்டாரவன்னியனின் நினைவுத் தூபியிலிருந்து பேரணியாகச் சென்று தாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் (தாண்டிக்குளம் ரயிக் நிலையம் முன்பாக) பிரகடனம் இடம்பெறவுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் இடம்பெறவுள்ள இந்தப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்க, அனைத்து வேறுபாடுகளையும் கடந்து தமிழ் மக்களை அணிதிரண்டு வருமாறு அழைக்கின்றோம். – என்றார்.

## சமையல் எரிவாயு விலை ரூ.3,535 ஆக உயர்கிறது?

சமையல் எரிவாயு கொள்கலன் விலை, 835 ரூபாவினால் அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. எனினும், எரிவாயு கொள்கலன் விலையை அதிகரிப்பது தொடர்பில், இதுவரையில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது லிட்ரோ நிறுவன வீட்டு சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்று, 2,700 ரூபாவுக்கு விற்பனையாகின்றது. இந்த நிலையில், 835 ரூபாவால் விலை அதிகரிக்கப்பட்டால், சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலை 3,535 ரூபாவாக உயர்வடையும்.

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு இரண்டு நாள்களுக்குள் வெளியீடு

கொழும்பு, மார்ச் 13

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் அடுத்த இரு நாள்களுக்குள் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

3 இலட்சத்து 40 ஆயிரத்து 508 மாணவர்கள் இம்முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றியுள்ளனர். இதில் 85 ஆயிரத்து 440 மாணவர்கள் தமிழ் மொழியில் பரீட்சையில் தோற்றியவர்களாவர்.

## கையடக்க தொலைபேசிகளின் விலை 30 வீதத்தால் அதிகரிப்பு!

கையடக்க தொலைபேசிகள் மற்றும் அதற்கான உபகரணங்கள் உள்ளிட்டவற்றின் விலை 30 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது.

இலங்கை கையடக்க தொலைபேசி விற்பனையாளர்கள் சங்கம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

டொலர் ஒன்றின் விலை அதிகரித்துள்ள நிலையிலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.